வானவில்

VAANAVIL

| இதழ் 100 | சித்திரை 2019 |
|---|---|
| ISSUE 100 | APRIL 2019 |


# இலங்கை குண்டுத் தாக்குதல்களின் பின்னணியும் பின்நோக்கும் என்ன?




இலங்கையில் கிறிஸ்தவர்களின் பெருநாளான ஈஸ்டர் – ஏப்ரல் 21ந் திகதி – ஞாயிற்றுக்கிழமையன்று சில தேவாலயங்களிலும், தலைநகர் கொழும்பிலுள்ள சில நட்சத்திர விடுதிகளிலும் பயங்கரவாத சக்திகளினால் நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதல்களில் - தற்கொலைத் தாக்குதல் உட்பட – முன்னூறுக்கும் அதிகமான அப்பாவி பொதுமக்கள் கொல்லப்பட்டதுடன், ஐநூறுக்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர்.

இந்த விவகாரம் குறித்து ஆராயப் புகுமுன்னர், இந்த மிலேச்சத்தனமான தாக்குதலில் கொல்லப்பட்ட, காயமடைந்த அனைத்து மக்களுக்கும் அவர்களின் உறவுகளுக்கும் 'வானவில்' சார்பாக எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இந்த தாக்குதலை நடத்தியவர்கள் இலங்கையின் தேசிய தவ்ஹீத் ஜமாத் என்ற அமைப்பைச் சேர்ந்தவர்கள் என்ற தகவல் தெரிய வந்துள்ளது. இந்த அமைப்பைச் சேர்ந்த இரு சகோதரர்கள் கிழக்கு மாகாணம் காத்தான்குடியைச் சேர்ந்தவர்கள் என்றும், இவர்களே இந்த தாக்குதல்களின் சூத்திரதாரிகள் என்றும் சொல்லப்படுகிறது. இவர்கள் காத்தான்குடியில் பெரும்பான்மையான முஸ்லீம் மக்கள் பின்பற்றும் இஸ்லாமிய கோட்பாடுகளுக்கு விரோதமாக இன்னொரு மதக் கோட்பாட்டைப் பின்பற்றும் ஒரு பள்ளிவாயிலை அங்கு நடத்தி வந்ததாகவும், அங்கு வைத்தே சிலருக்கு பயங்கரவாதப் பயிற்சி வழங்கப்பட்டதாகவும் தெரிய வருகிறது.

இந்த தாக்குதல்கள் முழுக்க முழுக்க உள்ளூர் செயற்பாடு என சில அமைச்சர்கள் உட்பட பலர் ஆரம்பத்தில் கருத்து வெளியிட்டனர். ஆனால் இந்த தாக்குதல்களுக்கு "ஐ.எஸ்" என்ற சர்வதேச பயங்கரவாத அமைப்பு உரிமை கோரிய பின்னரே, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, கொழும்பிலுள்ள அமெரிக்க தூதுவர் உட்பட பலர் இந்த தாக்குதல்களுக்கு சர்வதேச பின்னணி இருக்கலாம் எனக் குறிப்பிட்டிருக்கின்றனர்.

இந்த ஐ.எஸ். என்ற பயங்கரவாத அமைப்பு உலகம் முழுவதையும் இஸ்லாமிய ஆட்சியின் கீழ் கொண்டு வருவதற்காகப் போரிடும் ஓர் அமைப்பு எனக் கூறப்படுகிறது. இவ்வமைப்பில் உலகின் பல நாடுகளைச் சேர்ந்தவர்கள் இருக்கின்றனர். இவர்கள் பல நாடுகளில் செயற்படுவதுடன், சிரியாவில் ஆசாத்தின் அரசாங்கத்துக்கு எதிராக கடுமையாகப் போரிட்டு அதில் அண்மையில் தோல்வியும்

தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க…

**நூறு சிந்தனை மலரட்டும்**

# ஜூலியன் அசான்ஞ் கைது செய்யப்பட்டதை கண்டிக்கின்றோம்!

**வி**க்கிலீக்ஸ் (WikiLeaks) ஸ்தாபகர் ஜூலியன் அசான்ஞ் (Julian Assange) 11.02.2019 அன்று, இலண்டனிலுள்ள ஈக்குவடோர் தூதரகத்திற்குள் நுழைந்த பிரித்தானியாப் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார். பொலிஸ் வாகனமொன்றில் ஏற்றப்படுவதற்காக, தூதரகத்திலிருந்து அவர் பொலிசாரால் இழுத்துச் செல்லப்படும் புகைப்பட மற்றும் காணொளிக் காட்சிகள் நெஞ்சை உருக்குவதாக அமைந்திருந்தன.

விக்கிலீக்ஸ் இணையத்தளம் வாயிலாக அமெரிக்கா உட்பட பல நாடுகளின் ராஜாங்கம் மற்றும் இராணுவ இரகசியங்களை வெளியிட்ட ஜூலியன் அசான்ஞ்சை கைது செய்ய அமெரிக்கா கடும் முயற்சி மேற்கொண்டு வந்தது. ஆனால், அவர்களிடம் சிக்காமல் 2012 ஆம் ஆண்டு அசான்ஞ் இலண்டனில் உள்ள ஈக்குவடோர் (Ecuador) தூதரகத்தில் தஞ்சம் அடைந்திருந்தார். சர்வதேச நாடுகளின் விதிமுறைப்படி, தஞ்சம் அளித்துள்ள நாட்டின் தூதரகத்தினுள் சென்று யாரையும் கைது செய்ய முடியாது.

எனவே கடந்த ஏழு ஆண்டுகளாக (2487 நாட்கள்) அசான்ஞ், ஈக்குவடோர் தூதரகத்துக்கு உள்ளேயே தொடர்ச்சியாக காலம் கழித்து வந்தார். ஆனால் 24.05.2017 இல் ஈக்குவடோரின் ஜனாதிபதியாக வந்த லெனின் மொரேனோ (Lenín Moreno), அசான்ஞ்சிற்கு வழங்கப்பட்டு வந்த பாதுகாப்பை ஈக்குவடோர் விலகிக் கொள்வதாக அறிவித்ததைத் தொடர்ந்து, அவர் பிரித்தானியாப் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார். 47 வயதான அசான்ஞ், அவுஸ்திரேலியாவைப் பிறப்பிடமாகக் கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

25.03.2019 இல், ஈக்குவடோர் ஜனாதிபதி லெனின் மொரேனோ ஊழல் குற்றச்சாட்டுத் தொடர்பாக விசாரிக்கப்பட உள்ளாரென்ற செய்தியை விக்கிலீக்ஸ் வெளியிட்டது. இதன் காரணமாகவே, அசான்ஞ்சிற்கு வழங்கப்பட்டு வந்த தஞ்சம் முடிவுக்கு வந்தது. அதேவேளை கடனிலிருந்து மீள்வதற்காக லெனின் மொரேனோ, அசான்ஞ்சை அமெரிக்காவிற்கு விற்க முயல்வதாகவும் நியுயோர்க் ரைம்ஸ் (New York Times) செய்தியொன்றினை வெளியிட்டுள்ளது.

அமெரிக்கா தொடர்பாக பல இரகசிய ஆவணங்களை விக்கிலீக்ஸ் வெளியிட்டதால், விக்கிலீக்ஸ் நிறுவனர் அசான்ஞ் மீது பல போலிக்குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன. அவர் மீது, 2010ஆம் ஆண்டு சுவீடன் நாட்டைச் சேரந்த இரு பெண்களால் பாலியல் பலாத்கார புகார் ஒன்றும் பதிவு செய்யப்பட்டது. அப்போது அவர் இலண்டனில் இருந்தார். இவரை இலண்டனில் கைது செய்து சுவீடனிற்கு அனுப்பப்பட்டால், சுவீடன் வழியாக தன் நாட்டிற்கு கொண்டு வரலாம் என்பதே அமெரிக்காவின் திட்டமாக இருந்தது. ஆனால் இவரைக் கைது செய்வதற்காக நீதிமன்றம் ஆணை பிறப்பித்த நிலையில், 2012 இல் இலண்டனிலுள்ள ஈக்குவடோர் நாட்டு தூதரகத்தினுள் நுழைந்து, ஜூலியன் அசான்ஞ் அரசியல் தஞ்சம் கோரினார். அங்கிருந்து கொண்டே தன் மீதான பாலியல் குற்றச்சாட்டை அசான்ஞ் தொடர்ந்து மறுத்து வந்திருக்கிறார். ஈக்குவடோர் தூதரகம் ஒத்துழைப்பு வழங்க மறுத்து வருவதைக் காரணங்காட்டி, அசான்ஞ் மீதான பாலியல் குற்றச்சாட்டு வழக்கை 2017 ஆம் ஆண்டு சுவீடன் வழக்கறிஞர்கள் கைவிட முடிவு செய்தனர். எனினும் ஈக்குவடோர் தூதரகத்திலிருந்து வெளியேறினால், பிரித்தானியா பொலிசாரால் கைது செய்யப்பட்டு அமெரிக்காவிடம் ஒப்படைக்கப்படலாம் என்று கருதியே அவர் தொடர்ந்தும் தூதரகத்தைவிட்டு வெளியேற மறுத்து வந்தார்.

அசான்ஞ் ஆரம்பத்தில் ஒரு கணணிப் பொறியியலாளராக இருந்திருக்கிறார். 2006 இல் சில நண்பர்களோடு சேர்ந்து ஐஸ்லாந்தில் விக்கிலீக்ஸ் எனும் இணையதளத்தை நிறுவினார். இது ஓர் இலாப நோக்கமற்ற ஊடகம். 2016 ஆம் ஆண்டுக்குள், அதாவது முதல் பத்தாண்டுகளில், விக்கிலீக்ஸ் 10 மில்லியனுக்கும் மேற்பட்ட இரகசிய ஆவணங்களையும், அது தொடர்புடைய பகுப்பாய்வுகளையும் வெளியிட்டுள்ளது.

2010ஆம் ஆண்டு அமெரிக்க இராணுவ உளவுத்துறை ஆய்வாளர் செல்சீ மான்னிங் (Chelsea Manning) என்பவர், விக்கிலீக்ஸை பார்த்துவிட்டு ஜூலியன் அசான்ஞ்சை தொடர்பு கொண்டார். அமெரிக்க புலனாய்வு மற்றும் இராணுவ நடவடிக்கைகள் தொடர்பாக, இவர் ஏறத்தாழ 750000 ஆவணங்களை அசான்ஞ்சிற்கு வழங்கினார். இவற்றுள் 12.09.2007 அன்று பாக்தாத்தில் அமெரிக்க இராணுவம் பொதுமக்களின் மேல் நடாத்தி, 18 பேரைக் கொன்ற விமானத் தாக்குதலின் காணொளியும் அடங்கும். இந்தக் காணொளியை அசான்ஞ்சே விக்கிலீக்ஸில் வெளியிட்டு உலகை அதிர வைத்தார். விக்கிலீக்ஸ் தொடர்பான விசாரணைகளுக்கு ஒத்துழைக்க மறுத்து வருவதால், செல்சீ மான்னிங் இப்போது அமெரிக்காவில் சிறையில் உள்ளார்.

அசான்ஞ் கைது தொடர்பாக 'தி இந்து' பத்திரிகை குழுமத்தின் முன்னாள் ஆசிரியர் என். ராம், மத்திய அரசின் முன்னாள் மேலதிக வழக்கறிஞர் இந்திரா ஜெய்சிங், எழுத்தாளர்கள் அருந்ததி ராய், கோபால கிருஷ்ண காந்தி, பத்திரிகையாளர் பி. சாய்நாத், வரலாற்றாசிரியர் ரோமிலா தாப்பர் ஆகியோர் இணைந்து கண்டன அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர். அந்த அறிக்கையில்,

'அமெரிக்காவின் தூண்டுதலின்பேரில் விக்கிலீக்ஸ் நிறுவனரும் ஆசிரியருமான ஜூலியன் அசான்ஞ் இலண்டனில் கைது செய்யப்பட்டிருப்பது கண்டிக்கத்தக்கது. அவருடைய கைதும், அமெரிக்காவிடம் ஒப்படைக்கும் முயற்சியும் பத்திரிகை சுதந்திரத்தின் மீதும் பதிப்பிக்கும் முயற்சியின் மீதும் நடாத்தப்பட்ட தாக்குதலாகும். கருத்துரிமை, சுதந்திரம் மற்றும் அச்சமில்லா இதழியலின் மீது நடாத்தப்பட்டிருக்கும் துன்புறுத்தலுக்கு எதிராக குரல் எழுப்பும்படி பத்திரிகையாளர்களையும் வாசகர்களையும் நாங்கள் அழைக்கிறோம்' என்று கூறப்பட்டுள்ளது.

நாங்களும் **'பிரித்தானியா அரசே! ஜூலியன் அசான்ஞ்சை அமெரிக்காவிடம் ஒப்படைக்காதே! அவரை உடனடியாக விடுதலை செய்!'** என உரக்கக் கத்துவோம்.

**தொடர்பு மின்னஞ்சல் முகவரி:** sunvaanavil@gmail.com

'வானவில்' இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் மேலுள்ள மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்:

**வானவில்**

**இணையத்தளம்:** http://manikkural.wordpress.com/ இந்த இணையத்தளத்தில் இதுவரையில் வெளிவந்த அனைத்து வானவில் இதழ்களையும் வாசிக்கலாம்.

## புத்தாண்டு வாழ்த்துக்கள்!

'வானவில்' வாசகர்கள் அனைவருக்கும் தமிழ் - சிங்கள புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**-ஆசிரியர் குழு**

# காட்டுமிராண்டித்தனமான புதிய பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முறியடிக்க த.தே.கூ, ஜே.வி.பி. கட்சிகள் உதவுமா?

ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் தற்பொழுது நடைமுறையில் உள்ள பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை (Prevention of Terrorism Act - PTA) நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக புதிய சட்டம் (Counter Terrorism Act - CTA) ஒன்றைக் கொண்டு வருவதில் தீவிரமாக முனைப்புக் காட்டி வருகின்றது. தற்பொழுது நடைமுறையில் உள்ள பயங்கரவாத தடுப்புச் சட்டமும் 1978 ஆம் ஆண்டில் அப்போதைய அரச தலைவர், ரணில் விக்கிரமசிங்கவின் மாமனார் ஜே.ஆர்.ஜெயவர்த்தன தலைமையிலான ஐ.தே.க. அரசாங்கத்தால் கொண்டு வரப்பட்டதே.

தற்போதைய சட்டம் கொண்டு வரப்பட்டதன் நோக்கம் அந்தக் காலகட்டத்தில் உருவாகி வந்த அரசுக்கு எதிரான தமிழர்களுடைய போராட்டத்தை நசுக்குவதற்காகவே என்பது எல்லோரும் அறிந்த விடயம். ஆனால் அந்தச் சட்டம் தமிழர்களுக்கு எதிராக மட்டுமின்றி, தொழிற்சங்கங்கள், மனித உரிமை அமைப்புகள், ஊடகங்கள் என எல்லாவற்றுக்கும் எதிராகப் பயன்படுத்தப்பட்டதுதான் வரலாறு. ஆனால் அந்தச் சட்டத்தால் மிகவும் அதிகமாகவும் மோசமாகவும் பாதிக்கப்பட்டது தமிழ் மக்களே.

அந்தச் சட்டம் கொண்டு வரப்பட்ட நேரத்தில் நாட்டிலுள்ள பெரும்பாலான அரசியல் கட்சிகள், தொழிற்சங்கங்கள், மனித உரிமை அமைப்புகள், சிவில் அமைப்புகள் என எல்லாத் தரப்பினரும் அதை எதிர்த்தனர். இருந்தும் தொடர்ந்து வந்த எல்லா அரசாங்களாலும் இன்றுவரை அந்தச் சட்டம் பயன்படுத்தப்பட்டே வந்திருக்கிறது. யுத்தத்தைக் காரணம் காட்டியே அந்தச் சட்டம் பாதுகாக்கப்பட்டு வந்தது.

இப்பொழுது யுத்தம் முடிவுக்கு வந்து 10 ஆண்டுகள் ஆகிவிட்ட போதிலும் அந்தச் சட்டம் நீக்கப்படாமலே இருந்து வருகிறது. அதுமாத்திரமல்லாமல், அந்தச் சட்டத்தை முற்றாக நீக்க வேண்டிய சூழலில், அந்தச் சட்டத்தை நீக்கப் போவதாகச் சொல்லிக்கொண்டு அரசாங்கம் அதையும் விட மிக




மோசமான சட்டம் ஒன்றை அதன் இடத்தில் வைப்பதற்கு முனைப்புக் காட்டுகின்றது.

வரப்போகும் புதிய சட்டம், அரசியல் கட்சிகள், தொழிற்சங்கங்கள், ஊடகங்கள், மனித உரிமை அமைப்புகள், சிவில் அமைப்புகள் என மக்களின் அனைத்துப் பிரிவினரையும் மிக மோசமாக ஒடுக்கப் போகும் சட்டமாகும். இந்தச் சட்ட மூலத்தின்படி யாராவது ஒருவர் ஜனநாயக வழிமுறையில் தன்னும் அரசாங்கத்துக்கு தனது எதிர்ப்பை வெளிப்படுத்தினால் கூட, அவர் மறு பேச்சின்றி 20 வருடங்களுக்கு சிறையில் தள்ளப்படுவார். இந்தச் சட்ட மூலத்தின் பிரகாரம் பொலிசாருக்கு மேலதிக அதிகாரங்கள் வழங்கப்படுவது மட்டுமின்றி, அமைச்சர்களுக்கும் சில அதிகாரங்கள் வழங்கப்படுகின்றன. சாதாரண காலத்திலேயே தமது அரசியல் எதிரிகளைப் பழிவாங்கும் அமைச்சர்கள் இந்த அதிகாரம் கிடைத்தால் எப்படிச் செயல்படுவார்கள் என்பதைச் சொல்லத் தேவையில்லை.

இந்தச் சட்ட மூலத்தின் மூலம் இலங்கையில் ‘பொலிஸ் இராஜ்யம்’ ஒன்றை அரசாங்கம் உருவாக்க முற்படுவதாக குற்றம் சாட்டியுள்ள எதிர்க்கட்சி, இதை எதிர்க்க நாட்டிலுள்ள அனைவரும் ஒன்றுபட வேண்டும் என அழைப்பு விடுத்துள்ளது.

வழமையாக ஐ.தே.கவுக்கு எதிரான அரசாங்கங்கள் ஏதாவது நடவடிக்கை எடுத்தால் “ஐயோ ஜனநாயகம் கொலை செய்யப்படுகிறது” என பூமிக்கும் வானத்துக்குமாகத் துள்ளிக் குதிக்கும் மேற்கு நாடுகளும், அவற்றால் போசிக்கப்படும் சர்வதேச மனித உரிமை அமைப்புகளும் ஐ.தே.க. அரசாங்கம் கொண்டுவர உத்தேசித்துள்ள புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் குறித்து கள்ள மௌனம் காத்து வருகின்றன. அதற்குக் காரணம் எதிர்க்கட்சி சொல்வது போல இந்த சட்ட மூலத்தைக் கொண்டு வருவதில் சில சர்வதேச சக்திகளுக்கும் தொடர்பு உள்ளது என்பதால் தானோ என்னவோ என எண்ணத் தோன்றுகிறது.

எது எப்படியிருந்த போதிலும், இந்த புதிய மிலேச்சத்தனமான சட்டம் அமுலுக்கு வருவதை நாட்டு மக்கள் அனுமதிக்கக்கூடாது. மக்கள் அனுமதிக்கக்கூடாது என்றால், அவர்கள் தனித்தனியாக எதிர்த்து அதை முறியடிக்க முடியாது. அவர்கள் அமைப்புகளாக ஒன்றிணைந்து இந்தச் சட்ட மூலத்துக்கு எதிராக வீதிகளில் இறங்கிப் போராட வேண்டும்.

**புனிதன்**

அதே நேரத்தில் இந்தச் சட்ட மூலத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றினால்தான் சட்டமாக்க முடியும். அப்படி நிறைவேற்ற விடாமல் தடுப்பது மக்கள் பிரதிநிதிகளான எதிர்க்கட்சியினரின் தலையாய கடமையாகும்.

பிரதான எதிர்கட்சியைப் பொறுத்தவரை இந்தச் சட்ட மூலத்தை தாம் தீவிரமாக எதிர்ப்பதாக அது பகிரங்கமாக அறிவித்துவிட்டது. ஆனால் பிரதான எதிர்க்கட்சியிடம் 95 உறுப்பினர்கள் வரை மட்டும் இருப்பதால் இந்தச் சட்ட மூலத்தைத் தோற்கடிப்தற்கு அது போதாது. மற்றைய இரு எதிர்க்கட்சிகளான தமிழ் தேசியக் கூட்டமைப்பு, ஜே.வி.பி. என்பனவற்றிடமுள்ள 22 உறுப்பினர்களின் ஆதரவும் கிடைத்தால்தான் இந்தச் சட்ட மூலத்தை நிறைவேற்றாமல் தடுக்கு முடியும்.

கடந்த காலத்தில் நடைமுறையில் இருக்கும் பயங்கரவாதச் சட்ட மூலத்தால் அதிகம் பாதிக்கப்பட்டவர்கள்

தமிழ் மக்களே. அப்படியான ஒரு சூழ்நிலையில் தற்போதைய சட்டத்தையும் விட மிகவும் மோசமான ஒரு சட்ட மூலம் கொண்டு வரப்படுகையில் தமிழ் மக்களின் பிரதான பிரதிநிதிகளாக நாடாளுமன்றத்தில் இருக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு அதை எதிர்த்தே ஆக வேண்டும்.

அதேபோல, தற்போதைய பயங்கரவாதத் தடைச் சட்டத்தால் அதிகம் பாதிக்கப்பட்டவர்கள் (1988 – 89 காலகட்டத்தில்) ஜே.வி.பியினர். அவர்களும் இந்தச் சட்ட மூலத்தை எதிர்த்தே ஆக வேண்டும்.

இவ்விரு தரப்பினரும் ஜனநாயகத்தின் மீதும், மக்கள் மீதும் உண்மையான அக்கறையுள்ளவர்களாக இருப்பின் பிரதான எதிர்க் கட்சியுடன் இணைந்து இந்தச் சட்ட மூலத்தை நாடாளுமன்றத்தில் எதிர்த்து தோற்கடிக்க வேண்டும். அப்படி ஒன்றிணைவார்களாக இருந்தால் இந்தச் சட்ட மூலத்தை அரசாங்கத்தால் நிறைவேற்ற முடியாமல் போகும். அதை விடுத்து இப்பொழுது மறைமுகமாக அரசாங்கத்துக்கு முண்டு கொடுத்து வருவது போல இந்தச் சட்ட மூல விடயத்திலும் நடந்து கொள்வார்களாயின் நாடு இன்னொரு பாரிய அழிவைச் சந்திப்பது தவிர்க்க முடியாதது ஆகிவிடும்.

கப்பல் மூழ்கும் போது அந்தக் கப்பலில் உள்ள அனைவரும் சேர்ந்துதான் மூழ்க வேண்டி வரும் என்பதை இந்த இரு தரப்பினரும் புரிந்து கொண்டு செயற்படுவது காலத்தின் கட்டாயமாகும்.

# இப்படித்தான் செய்திகள் திரிக்கப்படுகின்றன!

**யா**ழ்ப்பாணத்தில் இருந்த வெளிவரும் 'உதயன்' பத்திரிகையின் மார்ச் 27 ஆம் திகதிய பதிப்பில் ஒரு செய்தி இவ்வாறு தலைப்பிடப்பட்டிருந்தது.

"வடக்கு எம்.பிக்களுக்கு ஆங்கிலம் தெரியாதாம்"

இந்தத் தலைப்பைப் பாரத்துவிட்டு, 'மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளைப் பற்றி யார் இப்படிக் கேவலமாகச் சொல்லியிருப்பார்கள்' என பலரும் அங்கலாய்த்திருப்பார்கள்.

ஆனால் அந்தச் செய்தியில் வடக்கு ஆளுநர் சுரேன் ராகவன்தான் இப்படிச் சொன்னதாகத்தான் செய்தி போடப்பட்டிருந்தது. ஒரு ஆளுநர், அதுவும் ஒரு தமிழர் மக்கள் பிரதிநிதிகள் பற்றி இப்படித் தரக்குறைவாகப் பேசியிருப்பாரா என்பதை நம்பவே முடியவில்லை. எனவே அந்தச் செய்தியை முழுமையாக வாசித்தேன். விடயம் இதுதான்.

இப்பொழுது அரசாங்கம் நாடு முழுவதும் சில பாடசாலைகளைத் தேர்ந்தெடுத்து அவற்றை தேசியப் பாடசாலைகளாக தரமுயர்த்தி வருகின்றது. அதன் அடிப்படையில் வட மாகாணத்தில் 14 பாடசாலைகள் தேசியப் பாடசாலைகளாக தரமுயர்த்தப்பட வாய்ப்பு உள்ளது.

எனவே, வட மாகாணத்தில் உள்ள 5 மாவட்டங்களிலும் எந்தெந்தப் பாடசாலைகளை தேசியப் பாடசாலைகளாகத் தரமுயர்த்தலாம் எனக் கேட்டு வட மாகாண ஆளுநர் சுரேன் ரகவன் வடக்கிலுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஆங்கிலத்தில் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார். கோட்டும் சூட்டுமாகத் திரியும் எமது எம்.பிக்கள் சிலருக்கு இது ஆத்திரத்தை உண்டுபண்ணியுள்ளது. "தானைத் தமிழர்களான எமக்கு நீ யார் ஆங்கிலத்தில் கடிதம் அனுப்பி வைப்பது?" என கெம்பி எழும்பியுள்ளனர்.

இதனால் மிரண்டு போயோ என்னவோ, "வடக்கிலுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஆங்கிலத்தில் கடிதம் அனுப்பியது தவறுதான். தமிழில் அனுப்பியிருக்க வேண்டும்" என ஆளுநர் பகிரங்க நிகழ்வு ஒன்றில் பேசும்போது தனது வருத்தத்தைத் தெரிவித்துள்ளார்.

அவர் இவ்வாறு வருத்தம் தெரிவித்ததிற்குத்தான் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் 'சப்றா' புகழ் ஈ.சரவணபவனுக்குச் சொந்தமான 'உதயன்' பத்திரிகை "வடக்கு எம்.பிக்களுக்கு ஆங்கிலம் தெரியாதாம்" என தலைப்பிட்டு, ஆளுநர் பேசாத விடயத்தைப் பேசியதாகத் தலைப்பிட்டுள்ளது.

ஏற்கெனவே, கூட்டமைப்பின் இன்னொரு பாராளுமன்ற உறுப்பினரான எம்.ஏ.சுமந்திரன், 'வடக்கு ஆளுநர் அரசியல் பேசுவதில்லை என்று சொல்லிக்கொண்டு அரசியல் செய்கிறார்' என குற்றச்சாட்டொன்றைச் சுமத்தியிருந்தார். இந்தப் பின்னணியிலேயே சரவணபவனின் உதயன் ஆளுநர் மீது இப்படிச் சேறு பூசியுள்ளது.

ஏற்கெனவே வடக்கு ஆளுநர் மீது இருநூற்றுக்கும் மேற்பட்ட வழக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகச் செய்திகள் வந்துள்ள நிலையில், தமிழ் தேசியக் கூட்டமைப்பு வடக்கு ஆளுநருக்கு எதிராக மறைமுகமாகத் தூக்கியுள்ள போர்க்கொடி என்னென்ன விளைவுகளை ஏற்படுத்தப் போகிறதோ என்ற கவலை தமிழ் மக்களின் நலனில் அக்கறையுள்ளவர்கள் மத்தியில் ஏற்படுவது தவிர்க்க முடியாதது.

ஆளுநர் தவறு செய்தால் தட்டிக் கேட்கும் உரிமை மக்களுக்கு இருக்க வேண்டும் என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆனால் கூட்டமைப்பினர் தமக்குப் பிடிக்கவில்லை என்பதற்காக எந்தவித முகாந்திரமும் இல்லாமல் ஆளுநர் மீது சேறு வீசுவது ஏற்க முடியாதது.

சில வேளைகளில் வடக்கு ஆளுநர் சுரேன் ராகவனை கூட்டமைப்பினருக்கு இப்பொழுது கசப்பானவராக மாறியுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நியமிக்காமல் கூட்டமைப்பினருக்குப் பிடித்தமான பிரதமர் ரணில் ரணில் விக்கிரமசிங்க நியமித்திருந்தால் ஆளுநருடன் கட்டிப்பிடித்து கூடிக்குலாவுவார்களோ என்னவோ?

---

உண்மையான இரும்புக் கோட்டை யாது? பொதுமக்கள், புரட்சியை உண்மையாகவும், விசுவாசமாகவும் ஆதரிக்கும் இலட்சோப இலட்சம் பொதுமக்களே ஆவர். இதுதான் உண்மையான இரும்புக் கோட்டையாகும். இதை எந்தச் சக்திகளாலும் உடைப்பது சாத்தியமாகாது, முற்றிலும் சாத்தியமாகாது. எதிர்புரட்சி நம்மை நசுக்க முடியாது. மாறாக எதிர்புரட்சியை நம்மால் நசுக்க முடியும், புரட்சிகர அரசாங்கத்தை சூழ இலட்சோப இலட்சம் மக்களையும் அணி திரட்டி, நமது புரட்சி யுத்தத்தை விரிவாக்கி, எதிர்ப்புரட்சி முழுவதையும் ஒழித்துக்கட்டி சீனா முழுவதையும் நாம் கைப்பற்றுவோம்.

– மாவோ –

# யேமன் உள்நாட்டுப் போர்: மனிதப் பேரவலத்தின் நான்கு ஆண்டுகள்




உலகில் நடப்பவை எல்லாம், கவனம் பெறுவதில்லை. கவனம் பெறுபவைகளில் பல, வெறும் பெட்டிச் செய்திகளாகவே கடந்து போகின்றன.

நமக்குச் சொல்லப்படும் செய்திகளை விட, நமக்குச் சொல்லாமல் விடப்படும் செய்திகள் அதிகம். கிட்டத்தட்ட பத்தாண்டுகளுக்கு முன், இலங்கையின் உள்நாட்டுப் போர், அவல முடிவுக்கும் மனிதப் பேரவலத்துக்கும் இட்டுச் சென்ற போது, உலகம் வாழாவிருந்தது என்பது, தமிழ் மக்கள் பலரது மனக் கவலை.

இன்று, பத்தாண்டுகளுக்குப் பின்னர், உலகின் ஒரு மூலையில், இலங்கையை ஒத்த இன்னொரு மனிதப்பேரவலம் அரங்கேறிக் கொண்டிருப்பதை நாமறிவோமா?

அந்தப் பேரவலம், எவ்வாறு அறியப்படாமல் கடந்து போகிறதோ, அவ்வாறுதான் பத்தாண்டுகளுக்கு முன்னர், எதுவித கவனமும் பெறாமல் எமது அவலமும் கடந்து போனது. ஊடகங்கள், இணைய வசதிகள், சமூக ஊடகங்கள், நவீன தொடர்பாடல் வசதிகள் என, தொடர்பாடல் வழிகளும் செய்திப் பரிமாற்ற வழிகளும் என்றும் இல்லாதளவு வளர்ச்சி பெற்றிருக்கின்ற காலத்தில், மத்திய கிழக்கில் வறிய நாடான யேமனில் (Yemen) , ஒரு மனிதப் பேரவலம், கடந்த நான்கு ஆண்டுகளாக நடந்தேறி வருகிறது.

ஜனவரி *2016* தொடக்கம், டிசெம்பர் *2018* வரையான மூன்றாண்டு காலத்தில் மட்டும், போரின் நேரடி விளைவால் *60,000* பேர் கொல்லப்பட்டு இருக்கிறார்கள். இதேகாலப் பகுதியில் நோயாலும், ஊட்டச்சத்து இன்மையாலும் 85,000 குழந்தைகள் இறந்திருக்கிறார்கள் என, தொண்டு நிறுவனமான Save the Children தெரிவிக்கின்றது. இதே காலப் பகுதியில், நோய், உணவின்மை போன்ற காரணிகளால் இறந்த ஏனையவர்களின் (குழந்தைகள் அல்லாதோர்) தகவல்கள் தெரியவில்லை.

## தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

ஐக்கிய நாடுகளின் தரவுகளின்படி, சராசரியாக வாரமொன்றுக்கு, போரால் நேரடியாக 100 பேர் வரையில் இறக்கிறார்கள். இதில் மூன்றில் ஒருபகுதி குழந்தைகளாகும்.

இந்த அவலம் பற்றிய எதுவித உணர்வுமற்று, நாம் செய்தியோடு செய்தியாக யேமனையும் கடந்து போகிறோம். இது கடந்த நான்காண்டுகளாக நடந்து வருகிறது.

சிரியா மீது இருந்த கவனம் யேமனின் மீது இருக்கவில்லை சிரியா பற்றி அறியப்பட்ட அளவு யேமன் அறியப்படவில்லை. ஏன்? இந்தக் கேள்வி பிரதானமானது. தமிழ் மக்களின் அவலத்தை, உலகம் ஏன் கவனிக்கவில்லை என்ற வினாவுக்கு, யேமன் பற்றிய கேள்வி பதிலைத் தரக் கூடும்.

### யேமன் உள்நாட்டு யுத்தத்தின் கதை

20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில், ஒட்டோமன், பிரித்தானிய சாம்ராஜ்யங்களின் பிடியில் இருந்த யேமனில் இரண்டாம் உலகப் போரின் முடிவும் அரபுத் தேசியவாதத்தின் எழுச்சியும் முக்கிய செல்வாக்குப் பெற்றன.

வடக்கு யேமனில், சவுதி அரேபிய ஆதரவுடன் ஆட்சியை நிறுவிய மதத்தலைவரின் ஆட்சிக்கும், எகிப்தின் நாசர் ஆதரவு பெற்ற கிளர்ச்சியாளர்களுக்கும் இடையிலான போரின் முடிவில், நாசரிய தேசியவாதிகள் வெற்றிபெற்று, ஆட்சியைப் பிடித்து, யேமன் அரபுக் குடியரசை உருவாக்கினார்கள்.

தெற்கு யேமனில், பிரித்தானிய கொலனியாதிக்கத்துக்கு எதிரான தேசிய விடுதலை முன்னணியின் போராட்டம், *1963*இல் யேமன் மக்கள் ஜனநாயகக் குடியரசை நிறுவியது.
மார்க்சிய லெனினிச அடிப்படையில் அமைந்த இந்த ஆட்சி, மத்திய கிழக்கில் நிலவிய ஒரேயொரு மார்க்சிய லெனினிச அரசாகும். மத்திய கிழக்கு நாடுகளில், குடியரசு ஆட்சி நிலவிய முற்போக்கான நாடுகளில் யேமன் முக்கியமானது.

*1990*இல் சோவியத் யூனியனின் சரிவும் கெடுபிடிப்போரின் முடிவும், இரண்டு யேமன்களும் ஒன்றாக்கப்பட்டு, யேமன் குடியரசு உருவாக்கப்பட்டது.

வடக்கு யேமனில், இராணுவச் சதியை அடுத்து, *1978*இல் ஜனாதிபதியாகப் பதவியேற்ற இராணுவ வீரரான அலி அப்துல்லா சலா, *1990*இல் ஒருங்கிணைந்த யேமனின் ஆட்சித் தலைவரானார். மேற்குலகின் செல்லப்பிள்ளையாக மாறிய சலா, சர்வதேச நிதி நிறுவனம், உலக வங்கி ஆகியவற்றிடம் கடன்களைப் பெற்று, ‘கட்டமைப்புச் சீர்திருத்தங்களை’ மேற்கொண்டு, ஊழல் நிறைந்த ஆட்சியை நடத்தி வந்தார்.

அதேவேளை, தனது ஆட்சியைத் தக்கவைக்க, சவூதி அரேபியாவுடனான உறவுகளை அதிகரித்து, சவூதி முன்னெடுக்கும் கடுங்கோட்பாட்டு இஸ்லாத்தை, யேமனில் நடைமுறைப்படுத்தினார்.

இது, தெற்கு யேமனில் மிகப்பெரிய அதிருப்தியை உருவாக்கியது. குறிப்பாகப் பெண்கள், இந்த நவீன பாணி இஸ்லாத்தை எதிர்த்தார்கள். அவர்கள், முன்னைய சோஷலிச யேமன் புரட்சிகரமானதாகவும்

முற்போக்கானதாகவும் இருந்ததாகவும் தாங்கள் எப்போதுமே ஹிஜாப் அணிந்திருக்கவில்லை என்றும் இப்போது அணியக் கட்டாயப் படுத்தப்படுவதைத் தாம் எதிர்ப்பதாகவும் தெரிவித்தனர்.

அதேவேளை, முன்னாள் சோஷலிச யேமனில், சமத்துவமும் வேலைவாய்ப்பும் நல்ல வாழ்க்கைத் தரமும் இருந்ததாகக் குறிப்பிட்டனர். இது குறித்த விரிவான குறிப்புகளை தாரிக் அலி எழுதியுள்ளார்.

2001ஆம் ஆண்டு, அமெரிக்காவின் 'பயங்கரவாதத்துக்கு எதிரான யுத்தத்தில்' யேமன் பங்காளியாகுமென சலா உறுதியளித்தார். 2004ஆம் ஆண்டு, அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்களை, 'ஹௌதியர்' எனப்படுகின்ற ஷெய்டி–ஷியா பிரிவினரான அன்சார் அல்லாஹ் குழுவினர் முன்னெடுத்தனர்.

யேமனிய முஸ்லிம்களில், 40சதவீதமானோர் ஷெய்டி–ஷியா பிரிவினராவர். இந்தக் கிளர்ச்சியை சவூதி அரேபியாவின் உதவியுடன் சலா எதிர்கொண்டார்.

ஷெய்டி–ஷியா பிரிவினரை ஒழிப்பதை, சவூதி, முக்கிய நோக்காகக் கொண்டது. சவூதி பரப்பும் 'வகாபிச' கடுங்கோட்பாட்டுவாத இஸ்லாமுக்கு ஷெய்டி தடையாக உள்ளது என, சவூதி நினைத்தது.

இந்தப் பின்புலத்தில், 2011இல் தொடங்கிய அரபு வசந்தத்தின் பகுதியாக, யேமனில் போராட்டங்கள் வெடித்தன. இதன் விளைவாக 2012இல் சலா, தனது பதவியைத் துறந்து, துணை ஜனாதிபதி ரபு மன்சூர் ஹாதியிடம் கையளித்தார்.

அரபு வசந்தத்தின் விளைவால், ஆட்சி மாற்றங்கள் நிகழ்ந்த துனீசியா, எகிப்து, யேமன், லிபியா ஆகிய நாடுகளில், யேமனிலேயே உறுதியான ஆட்சி நிலவுகிறது என மேற்குலக நாடுகள் போற்றின. ஜனாதிபதி ஹாதியின் ஆட்சியில் ஊழலும் கொள்ளையும் மக்கள் மத்தியில் அதிருப்தியை உருவாக்கியது.

இதைத் தொடர்ந்து, தமது போராட்டத்தில் முன்னேறிய ஹௌதியர்கள், யேமனியத் தலைநகர் சனாவை நெருங்கினர். அவர்கள், ஜனாதிபதி மாளிகையைச் சுற்றி வளைத்தனர். ஜனாதிபதி ஹாதி, சவூதி அரேபியாவுக்குத் தப்பியோடினார்.

பின்னர், துறைமுக நகரான ஏடனை, நாட்டின் புதிய தலைநகராக அறிவித்து, அங்கிருந்து ஆட்சி செய்யத் தொடங்கினார். இதைத் தொடர்ந்து, ஏடன் நகரைத் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் எடுப்பதற்கு, ஹௌதியர்கள் முன்னேறினர்.

## சவூதி அரேபியாவின் போரும் ஹௌதியர்களின் எழுச்சியும்

ஏடன் துறைமுகம், யேமனின் முக்கியமான கேந்திர மய்யமாகும். ஏடன் நகர், ஹௌதியர்களின் கைகளுக்குச் செல்வது, சவூதி அரேபியாவின் நலன்களுக்குப் பாதகமானது என்பதை உணர்ந்த சவூதி, யேமனில் தலையிட்டது.

2015 மார்ச் 26ஆம் திகதி, யேமனில் ஹௌதியர்களின் மீது விமானத்தாக்குதலைத் நடத்தி உள்நாட்டுப் போருக்கு, சர்வதேசப் பரிமாணத்தைக் கொடுத்தது. சவூதி அரேபியாவுடன் குவைட், கட்டார், பஹ்ரேன், ஐக்கிய அரபு எமிரேற்றுகள், ஜோர்டான், எகிப்து, மொராக்கோ ஆகிய நாடுகளும் இணைந்தன. அமெரிக்கா இந்தப் போரில், சவூதிக்கு முழுமையாக ஆதரவைத் தெரிவித்தது.

இன்று நான்கு ஆண்டுகளாக, ஹௌதியர்களுக்கு எதிராகச் சவூதி போரிட்டு வருகிறது. தினமும் குண்டுகளை, யேமனில் வீசுகிறது. சவூதிக்கு ஆயுதங்களை, அமெரிக்கா விற்கிறது புலனாய்வு, தொழில்நுட்ப உதவிகளை வழங்குகிறது.

ஆனால், இன்றுவரை ஹௌதியர்களைத் தோற்கடிக்க முடியவில்லை. 2015 மார்ச்சில் யேமனின் மீதான சவூதியின் தலையீட்டின் போது, மிகக்குறுகிய காலத்தில் ஹௌதியர்களை அகற்றும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், சவூதியின் போர் ஐந்தாவது ஆண்டுக்குள் நுழைகின்றது.

ஓர் இனக்குழுவாக இருந்த ஹௌதியர்கள், சிறிய ஆயுதப் படையாகி, இன்று யேமனின் தலைநகர் உள்ளிட்ட பகுதிகளை ஆட்சிசெய்யும் வலுவான அதிகாரம்மிக்க நிர்வாக ஆட்சியாளர்களாக உருமாறி இருக்கிறார்கள்.

சவூதிக்கெதிரான, ஹௌதியர்களின் இடைவிடாத, விட்டுக்கொடுக்காத போராட்டம், யேமனியர்கள் மத்தியில், ஹௌதியர்களுக்கான ஆதரவை அதிகரித்துள்ளது. அதேவேளை சவூதி–அமெரிக்கக் கூட்டணியை யேமனின் எதிரியாக மக்கள் பார்க்கிறார்கள்.

ஐ.எஸ்.ஐ.எஸ்ஸை யேமனில் இருந்து விரட்டியதில், ஹௌதியர்களின் பங்கு முக்கியமானது. இன்று சவூதி அரேபியாவுக்குத் துணையாக, அல்கைடா, ஹௌதியர்களுக்கு எதிராகப் போரிடுகிறது. அமெரிக்க ஆயுதங்களும் இராணுவத் தளபாடங்களும் சவூதி அரேபியாவின் மூலம் அல்கைடாவுக்கு வழங்கப்படுகிறது. இதை அமெரிக்காவின் பிரதான ஊடகங்களில் ஒன்றான CNN செய்திச்சேவையே அண்மையில் ஆதாரங்களுடன் அறிக்கையிட்டது.

ஹௌதியர்களுக்கு எதிராக, அமெரிக்காவும் அல்கைடாவும் ஒரே அணியில் நிற்கின்றன. சிரியாவிலும் ஒரே அணியிலேயே நின்றன. இத்தருணத்தில் அமெரிக்கா தனது பயங்கரவாத்துக்கு எதிரான யுத்தத்தை யாருக்கெதிராக முன்னெடுத்தது என்ற கேள்வி, அந்த முன்னெடுப்பின் உண்மையான நோக்கத்தை விளங்க உதவும்.

## அடுத்தது என்ன?

ஹௌதியர்களுக்கான ஈரானிய மற்றும் லெபனானிய ஹிஸ்புல்லாவின் ஆதரவானது, ஷியா - சுன்னி போராக, யேமனியப் போரை மாற்றியுள்ளது. அதேவேளை, தனது வகாபிச கடுங்கோட்பாட்டுவாத இஸ்லாமை, உலகம் முழுவதுக்குமான இஸ்லாமாக அறிவிக்க முனையும் சவூதியின் முனைப்பின், ஒரு களமாகவே யேமனைக் காணவேண்டியுள்ளது.

யேமனிய யுத்தம் இரண்டு முக்கிய காரணங்களுக்காக நிகழ்கிறது. முதலாவது, யேமனின் கேந்திர முக்கியத்துவம். குறிப்பாக, பப்–எல்–மன்டெப் (Bab-el-Mandeb – அரபு மொழியில் 'கண்ணீரின் கதவு' என்று அர்த்தமாகும்) ஜலசந்தியின் கட்டுப்பாடு தொடர்பானது. இந்த ஜலசந்தி, மத்தியதரைக் கடலையும் இந்து சமுத்திரத்தையும் செங்கடல் மற்றும் சூயஸ் கால்வாய் வழியாக இணைக்கும் முக்கிய புள்ளியாகும். எண்ணெய் வர்த்தகத்தின் மய்யப் புள்ளியே பப்–எல்–மன்டெப் ஜலசந்தியாகும். எனவே, அதைத் தக்கவைக்க அமெரிக்காவும் சவூதியும் முனைகின்றன.

இரண்டாவது காரணம், இதுவரை

**தொடர்ச்சி 7ம் பக்கம் பார்க்க...**

# மன்னார் மனிதப் புதைகுழி அளித்த ஏமாற்றம்!

**ம**ன்னார் நகரில் அகழப்பட்ட மாபெரும் மனிதப் புதைகுழியிலிருந்து இதுவரை 350 மனித எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளன.

இந்த எலும்புக்கூடுகள் யாருடையவை என்பது பற்றிய சரியான விபரங்கள் இதுவரை தெரிய வராத போதிலும், இவை யுத்த காலத்தில் - குறிப்பாக இறுதியுத்த நேரத்தில் இராணுவத்திடம் சரணடைந்து காணாமல் போனவர்களின் எலும்புக்கூடுகள் என்றும், இவற்றை இராணுவமே புதைத்திருக்கலாம் என்றும் தமிழர் தரப்பின் சில பகுதிகளால் ஊகங்கள் தெரிவிக்கப்பட்டு வந்தன.

மறுபக்கத்தில், இந்த எலும்புக்கூடுகள் புலிகளால் கொல்லப்பட்ட — குறிப்பாக இந்திய அமைதிப்படை வெளியேறிய 1990 ஆண்டுக் காலப்பகுதியில் இந்தியாவுக்கு தப்பிச் சென்ற போது கடலில் புலிகளால் பிடிக்கப்பட்ட பல நூறு மாற்று இயக்கப் போராளிகளின் குடும்பத்தினரின் எலும்புக்கூடுகள் என்ற ஊகங்களும் வெளிப்படுத்தப்பட்டன.

இந்த எலும்புக்கூடுகளின் மாதிரிகள் இலங்கை அரசாங்கத்தால் கடந்த ஜனவரி மாதம் அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்திலுள்ள ஆய்வுக்கூடத்துக்கு காபன் பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டன. அந்த ஆய்வறிக்கை இலங்கைக்கு கிடைத்து அது மன்னார் நீதிமன்றத்தால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

அமெரிக்க ஆய்வுகூட அறிக்கையின்படி இந்த எலும்புக்கூடுகள் பல நூற்றாண்டுகளுக்கு முந்தைய, அதாவது 1499 — 1720 ஆண்டு காலப்பகுதிக்கு உரியது என தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த முடிவு, இந்த எலும்புக்கூடுகள் பற்றி ஆளையாள் குற்றம் சாட்டி வந்தவர்களுக்கு பலத்த ஏமாற்றத்தைக் கொடுத்துள்ளது. பலர் இந்த முடிவை ஏற்க மறுத்து புதிய ஆய்வுகள் மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்தி உள்ளனர். (அத்துடன் இந்த மனிதப் புதைகுழியை அகழும் பணியும் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.)

அத்தகையவர்களின் கோரிக்கை நியாயமானது. ஏனெனில் ஒரு ஆய்வை மட்டும் வைத்து எதையும் முடிவு செய்துவிட முடியாது. வேறு சில நாடுகளுக்கும், குறிப்பாக எமது அயல்நாடான இந்தியாவுக்கோ அல்லது ரஸ்யா, சீனா, பிரித்தானியா, யப்பான் போன்ற நாடுகளுக்கோ சில மாதிரிகளை அனுப்பி மேலதிக ஆய்வுகளை மேற்கொள்வது அவசியம்.

அதே நேரத்தில் இந்த எலும்புக்கூடுகளின் காலகட்டம் பற்றி சில சந்தேகங்களும் எழுகின்றன. ஏனெனில், இந்த அகழ்வாய்வின் போது பிஸ்கட் பக்கற் ஒன்றின் மேலுறை கண்டெடுக்கப் பட்டதாகவும், அந்த பிஸ்கட் தென்னிலங்கையிலுள்ள பிஸ்கட் கொம்பனி ஒன்றின் உற்பத்தி எனக் கண்டறிந்து, அதில் பொறிக்கப்பட்டிருந்த விலையை வைத்து அது எந்த ஆண்டுக்குரியது எனக் கண்டறிந்ததாகவும் ஊடகங்களில் ஒரு செய்தி வெளிவந்திருந்தது. அப்படியானால் ஏன் அந்த தகவல் இந்த எலும்புக்கூடுகள் பற்றிய கால ஆராய்ச்சியில் கவனத்தில் எடுக்கப்படவில்லை?

## பங்கிராஸ்

அது ஒருபுறமிருக்க, உண்மையில் அமெரிக்க ஆய்வறிக்கை சொல்வது போல இந்த எலும்புக்கூடுகள் 300 — 500 ஆண்டுகளுக்கு முந்தைய காலப்பகுதிக்கு உரியவை என்றால், அந்தக் காலகட்டம் இலங்கையில் ஒல்லாந்தர், போரத்துக்கீசர், ஆங்கிலேயர் போன்ற அந்நிய சக்திகளின் காலனித்துவ ஆட்சி நிலவிய காலகட்டமாகும். அந்தக் காலகட்டத்தில் அந்நிய ஆதிக்கத்துக்கு எதிராகப் போரிட்ட இலங்கை மக்கள் பலர் காலனித்துவப் படைகளால் கொல்லப்பட்டிருக்கின்றனர். எனவே இந்த எலும்புக்கூடுகள் அதனுடன் சம்பந்தப்பட்டதா என்பதையும் ஆராய வேண்டும்.

இதுதவிர, இலங்கையில் மன்னார் வழியாகவே இஸ்லாமும் கிறிஸ்தவமும் பரவியதாக சில வரலாற்று அறிஞர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். அந்தக் காலகட்டத்தில் சில மதச் சண்டைகளும் நிகழ்ந்துள்ளன.

குறிப்பாக, யாழ்ப்பாணத்தை ஆண்ட சங்கிலி மன்னன் கிறிஸ்தவ மதத்துக்கு மாறிய 700 மன்னார் மக்களை தனது படைகளை அனுப்பி கொலை செய்ததாகவும் ஒரு தகவல் உண்டு.

எனவே, இந்த எலும்புக்கூடுகளில் இன்னும் சில மாதிரிகளை வெவ்வேறு நாடுகளுக்கு அனுப்பி, அவை உண்மையில் எந்தக் காலத்துக்குரியவை என்பதைக் கண்டறிவதுடன், அங்கு புதைக்கப்பட்ட மக்கள் - சிறுவர்கள், பெண்கள் உட்பட — யாரால், என்ன காரணத்துக்காக கொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டார்கள் என்பதையும் விசாரணை மூலம் வெளிக்கொணர வேண்டும். நிச்சயமாக இந்த அநீதியை இழைத்தவர்கள் யார் என்பது கண்டறியப்பட வேண்டும்.

இந்த விவகாரம் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த ஒரு விடயமாகும். இதை பாராமுகமாக விடுவது ஒரு மாபெரும் அநீதியை மறைப்பதற்கு ஒப்பானதாகும்.

**6ம் பக்கத்தொடர்ச்சி...**

எடுக்கப்படாத அதேவேளை, யேமனில் நிறைவாக உள்ள எண்ணெய் வளமாகும். *1988*ஆம் ஆண்டு எழுதப்பட்ட South Yemen's Oil Resources: The Chimera of Wealth என்று தலைப்பிடப்பட்ட அமெரிக்க உளவு நிறுவனமான சி.ஐ.ஏயின் அறிக்கையானது, இது குறித்த முழுமையான தகவல்களைத் தருகிறது.

ஒருகாலத்தில், பொருளாதார வலுவுடனும் சமத்துவத்துடனும் முற்போக்கான மத்திய கிழக்கு நாடாக விளங்கிய யேமன், எவ்வாறு நவதாராளவாதத்தினதும் பிராந்திய வல்லாதிக்கத்தினதும் ஆசைக்குப் பலியாகியது என்பதை, விளங்கிக் கொள்ள விரும்புவோர் ஹெலன் லக்னர் (Helen Lackner) எழுதிய Yemen in Crisis: Autocracy, Neo-Liberalism and the. Disintegration of a State என்ற நூலை வாசிக்கலாம்.

இலங்கைப் போரின் அவலமும் தமிழருக்கு இழைக்கப்பட்ட அநீதியும் ஏன் 'சர்வதேசச் சமூகத்தால்' கண்டுகொள்ளப்படவில்லை என்பதை விளங்க, இப்போது யேமனில் நடந்தேறுவதை விளங்குவது முக்கியமானது.

யேமன் விடயத்தில், தமிழர்கள் யார் பக்கத்தில் நிற்கிறார்கள்? போரை நடத்தும் அமெரிக்காவின் பக்கத்திலா, போரை எதிர்நோக்கும் யேமனியர்களின் பக்கத்திலா? போரையும் மனிதப் பேரவலத்தையும் அரங்கேற்றிக் கொண்டிருக்கும் அமெரிக்காவிடம், தமிழர்களுக்கான நீதியை எதிர்பார்ப்பது எவ்வளவு முட்டாள்த்தனமானது என்பது, இப்போதாவது எமக்கு விளங்க வேண்டும்.

**நன்றி: தமிழ்மிரர்**

நமது சொந்த விருப்பத்தைப் பொறுத்தவரை, நாம் ஒரு நாள் கூட போரிட விரும்பவில்லை. ஆனால் சூழ்நிலைகள் நம்மை போரிடும்படி நிர்ப்பந்தித்தால், நம்மால் இறுதிவரை போரிட முடியும். – மாவோ–

# கிளிநொச்சியில் தனியார் உப்பளம் அமைக்க இரகசியத் திட்டம்!

உலகில் உப்பு உற்பத்தியில் இலங்கைக்கு தனியான ஒரு இடம் உண்டு. அதுமாத்திரமில்லாமல் இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் வரலாற்றுக் காலம் முதல் உப்பு உற்பத்தி தேசியச் சொத்தாக, அதாவது அரச உடமையாகவே இருந்து வந்துள்ளது. அதனால்தான் இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்தின் போது பிரித்தானிய ஆட்சிக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதன் ஒரு அடையாளமாக பிரிட்டிஸ் காலனித்துவ ஆட்சியின் தடையை மீறி அரச உப்பளத்தில் சட்ட விரோதமாக உப்பு எடுக்கும் போராட்டத்தையும் காந்தி நடத்தினார்.



இலங்கையில் உள்ள உப்பளங்களில் மிகப்பெரியது ஆனையிறவு உப்பளம். இந்த உப்பளம் ஆனையிறவில் ஆரம்பித்து மேற்கே கொடிகாமத்துக்கு அருகேயுள்ள கச்சாய் வரை பரந்து இருந்தது. இதில் பல்லாயிரக்கணக்கான தொழிலாளிகள் வேலை செய்தனர். உப்பு எடுக்கும் பருவ காலங்களில் புத்தளம் - உடப்பு பகுதியிலிருந்து கூட தொழிலாளிகள் மேலதிகமாக வந்து வேலை செய்தனர். போர்க்காலத்தில் புலிகளின் கட்டுப்பாட்டில் இப்பகுதி இருந்ததால் உப்பளம் செயல்பட முடியாத நிலையில் இருந்தது. போர் முடிவுற்றதும் படிப்படியாகச் செயல்படத் தொடங்கியது.

'உப்பு இல்லாத பண்டம் குப்பையிலே' என்பது ஒரு பிரபல்யமான பழமொழி. ஆகையால்தான் இந்தப் பூவுலகில் வாழுகின்ற ஒவ்வொரு மக்களின் வீடுகளிலும் எது இல்லாவிட்டாலும் உப்பு தவறாமல் இருக்கும். உப்பு உணவுக்கு ருசி சேர்ப்பதற்கு மட்டுமின்றி, பல மருந்துகளின் மூலப் பொருளாகவும் இருக்கின்றது.

எனவே, இந்த அத்தியாவசியப் பொருளில் ஈடுபட்டால் இலாபம் ஈட்டலாம் என்ற சிந்தனை முதலாளித்துவ சக்திகளுக்கு வருவது இயல்பானது. இலங்கையைப் பொறுத்தவரை உப்பு உற்பத்தி இதுவரை காலமும் அரசாங்கப் பொறுப்பில் இருந்தாலும் இப்பொழுது பதவியில் உள்ள பெரு முதலாளிகளின் பிரதிநிதியான ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் உப்பு உற்பத்தியையும் தனியார் துறையினருக்கு தாரைவார்க்கும் முயற்சியில் இறங்கியிருக்கிறது.

இதன் முதல் கட்டமாக கிளிநொச்சிப் பிரதேசத்திலுள்ள குஞ்சுப்பரந்தன் பகுதியில் 100 ஏக்கர் காணியை உப்பளம் அமைப்பதற்காக தென்னிலங்கையில் உள்ள தனியார் நிறுவனம் ஒன்றுக்கு வழுங்குவதற்கு அரசாங்கம் பச்சைக்கொடி காட்டியுள்ளதாகத் தெரிய வருகிறது. இது சமபந்தமான இரகசிய ஆலோசனைக் கூட்டம் ஒன்று அண்மையில் நடந்துள்ளது. இதில் சில அரசாங்க அதிகாரிகளும் பங்குபற்றியிருப்தாகத் தெரிய வருகிறது.

### ஜெயம்

இப்படியான தனியார்துறை முதலீட்டை தற்போதைய அரசாங்கம் ஊக்குவிப்பது இலங்கை அரசாங்கத்தால் உப்பு உற்பத்தித்துறையைக் கொண்டு நடத்துவதற்கு திறமையின்மையினால் அல்ல. தமக்கு சார்பான சில முதலாளிகள் இதுபோன்ற இயற்கை தந்த தேசிய வளங்களையும், தொழிலாளர்களின் உழைப்புச் சக்தியையும் மலிவாகக் கொள்ளையடிப்பதற்கு உதவி செய்வதற்காகவே. இந்த தேசத்துரோக, மக்கள் விரோத நடவடிக்கையை செயல்படுத்த மக்கள் ஒருபோதும் அனுமதிக்கக்கூடாது. ஒன்று திரண்டு தமது கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்து இந்தச் சதியை முறியடிக்க வேண்டும்.

இது ஒருபுறமிருக்க, இலங்கை உப்புக் கூட்டுத்தாபன அதிகாரிகள் சிலர் சில மாதங்களுக்கு முன்னர் இன்னொரு மக்கள் விரோதச் செயல்பாட்டிலும் ஈடுபடுவதற்குத் திட்டமிட்டிருந்தார்கள்.

அதாவது, ஆனையிறவு உப்பளம் கண்டி வீதியின் மேற்குப்புறமாகவே அமைந்திருக்கிறது. கண்டி வீதியின் கிழக்குப்புறம் உப்பு நீரும் நன்னீரும் கலந்த பகுதியாகும். மாரி மழையின் போது நீர் நிறைவதால் கிழக்கே பூனைத்தொடுவாய் என்ற இடத்தில் கிழக்குப் பக்கமுள்ள கடலேரி பெருங்கடலுடன் சங்கமிக்கின்றது. அதே நேரத்தில் தெற்கே பெய்யும் மழை நீராலும், இரணைமடுக்குளம் நிறைந்து வான் பாய்வதாலும் நன்னீரும் வந்து சேர்கின்றது. மழை காலம் முடிந்ததும் பூனைத்தொடுவாயில் உள்ள கடல் தொடர்பு துண்டிக்கப்பட்டு ஆனையிறவு கடலேரி தனி நீர்த்தேக்கமாகின்றது. மாரி காலத்தில் பூனைத்தெடுவாய் ஊடாக கடலிலிருந்து வந்த மீன்குஞ்சுகளும், இறால் குஞ்சுகளும் இந்த நீர்த்தேக்கத்தில் தங்கி வளர்கின்றன. இங்கு வளரும் கடல் உணவுகள் மிகவும் சுவையாகவும் பெறுமதி மிகுந்ததாகவும் இருக்கின்றன.

இந்தக் கடலேரியில் கோடை காலத்தில் அயலிலுள்ள கிராமங்களைச் சேர்ந்த மக்கள் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு தமது சொந்தத் தேவையைப் பூர்த்தி செய்வதுடன், வருமானமும் பெற்று வந்தனர். போர் தொடங்குவதற்கு முன்னர் தென்னிலங்கை மீனவர்கள் கூட ஆனையிறவுக்கு வந்து வாடி

அமைத்து மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வந்திருக்கின்றனர்.

நிலைமை இப்படியிருக்க, சில உப்புக் கூட்டுத்தாபன அதிகாரிகள் 'ஆனையிறவு உப்பளத்தை விஸ்தரிக்கிறோம்' என்ற போர்வையில் உப்பளத்தை கண்டி வீதியின் கிழக்குப்புறத்துக்கும் விஸ்தரிக்கும் நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு முயற்சித்தனர். இதன் மூலம் கிழக்கு பக்க கடலேரியை இல்லாமல் செய்து, சுற்றுச்சூழலை நாசமாக்கி, அயிலிலுள்ள கிராமங்களின் நல்ல நீர் கிணறுகளை உவர் நீராக்கி, நாசம் விளைவிக்க முயன்றனர்.

இவர்களது இந்த முயற்சிக்கு கடலேரியின் தென்பக்க கிராமங்களான கலவெட்டித்திடல், ஊரியான், தட்டுவன்கொட்டி, மடுக்கரை போன்ற கிராம மக்கள் எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு அரசாங்கத்துக்கு மகஜர் கையளித்ததால் அதிகாரிகள் தற்காலிகமாகத் தமது முயற்சிகளைக் கைவிட வேண்டிதாயிற்று. பொதுவாக இந்த முதலாளித்துவ சுரண்டல்கார சக்திகள் 'அபிவிருத்தி' என்ற போர்வையில் நாட்டின் தேசிய வளங்களையும், மக்களின் தனிப்பட்ட வளங்களையும் வகைதொகையின்றிச் சுரண்டி தமது பணப்பைகளை நிரப்புவதிலேயே கண்ணும் கருத்துமாக இருக்கின்றன.

இத்தகைய உள்நாட்டு – வெளிநாட்டு சக்திகளுக்கு தற்போதைய ஏகாதிபத்திய சார்பு ஐ.தே.க. அரசாங்கம் கதவுகளை அகலத் திறந்து நிலபாவாடை விரித்து வரவேற்பதைக் காணக்கூடியதாக உள்ளது.

இத்தகைய முயற்சிகளை மக்கள் விழிப்புடன் இருந்து இனம்கண்டு எதிர்த்து முறியடிக்காவிட்டால், இந்த நாசகார சக்திகளால் எமக்கு மட்டுமின்றி எமது எதிர்கால சந்ததிகளுக்கும் வாழ்வதற்கு ஒரு நாடு இல்லாமல் போய்விடும் அபாயம் இருக்கிறது.

# தோழர் ஜெயதிலக டி சில்வா காலமானார்!



**Comrade Jayathilake de Silva**

இலங்கையில் வெளியாகும் பிரபல ஆங்கிலப் பத்திரிகைகளான 'டெயிலி நியூஸ்', 'சண்டே ஒப்சேவர்' பத்திரிகைகளின் முன்னாள் பிரதம ஆசிரியரும், இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் செயற்பாட்டாளர்களில் ஒருவருமான ஜெயதிலக டி சில்வா தமது 80 ஆவது வயதில் பெப்ருவரி 25 ஆம் திகதியன்று காலமானார்.

அம்பலாங்கொடவில் 1938 இல் பிறந்த ஜெயதிலக டி சில்வா, கொழும்பு பல்கலைக்கழகத்தில் தன் பட்டப்படிப்பை முடித்த பின்னர், ஆசிரிய சேவையில் சேர்ந்து தெனியாய மத்திய கல்லூரியின் அதிபராகப் பணியாற்றினார்.

பின்னர் ஆசிரிய சேவையிலிருந்து விலகி இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்து அதன் முழுநேர ஊழியராகப் பல தசாப்தங்கள் செயல்பட்டார். அக்காலகட்டத்தில் கட்சியின் தினசரி பத்திரிகையான 'அத்த'வின் ஆசிரியராகவும் பணிபுரிந்தார். அவர் ஏராளமான சோசலிச நூல்களை ஆங்கிலத்திலிருந்து சிங்களத்துக்கு மொழிபெயர்த்துள்ளார். குறிப்பாக அவர் மொழிபெயர்த்த கார்ல் மார்க்சின் பிரசித்தி பெற்ற படைப்புகளான 'மூலதனம்' மூன்று தொகுதிகள் முக்கியமானவை.

தீவிர அரசியலிலிருந்து ஓய்வுபெற்ற பின்னர், லேக்கவுஸ் நிறுவனம் வெளியீட்டு வரும் 'டெயிலி நியூஸ்' பத்திரிகையில் 1990 களில் இணைந்து கொண்ட அவர் 2001 முதல் 2004 வரை அந்நிறுவனத்தின் ஆங்கிலப் பத்திரிகைகளின் பிரதம ஆசிரியராகப் பணி புரிந்தார். அக்காலகட்டத்தில் அப்பத்திரிகைகளில் அவர் எழுதிய ஆசிரிய தலையங்கங்கள் பலரின் கவனத்தையும் ஈர்ப்பனவாக இருந்தன. லேக்கவுஸ் நிறுவனத்திலிருந்து ஓய்வுபெற்ற பின்னரும் பல்வேறு ஆங்கில – சிங்களப் பத்திரிகைகளில் அரசியல் பத்திகளை எழுதி வந்தார்.

தோழர் ஜெயதிலக டி சில்வாவின் மறைவையொட்டி 'வானவில்' அன்னாரின் குடும்பத்தினர்க்கு தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

**–ஆசிரியர் குழு**

## துயர் பகிர்கின்றோம்:

# திருமதி கலாலக்ஸ்மி தேவராசா

பண்டத்தரிப்பை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவரும், இடதுசாரி செயற்பாட்டாளரும் சட்டத்தரணியுமான தோழர் சோ.தேவராசா அவர்களின் துணைவியாருமான கலாலக்ஸ்மி அவர்கள் 28-03-2019 அன்று தமது 58 ஆவது வயதில் தமது இல்லத்தில் காலமானார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கலாலக்ஸ்மி அவர்கள் இலங்கையின் வட பகுதியில் வாழ்கின்ற சில முற்போக்கு பெண் சிந்தனையாளர்களில் ஒருவராவார். அவர் எழுத்தாளராகத் திகழ்ந்ததுடன், சில நாடகங்களில் நடித்தும் நாடகங்களை நெறியாள்கை செய்தும் இருக்கின்றார்.

கலாலக்ஸ்மி அவர்களுக்கு 'வானவில்' சார்பாக எமது அஞ்சலியைச் செலுத்துவதுடன், அன்னாரது பிரிவால் வாடும் கணவர் தோழர் சோ.தேவராசா மற்றும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**–ஆசிரியர் குழு**

# சர்வதேச நாணய நிதியத்தின் ஆலோசனைகள் இலங்கைக்கு பயனளிக்குமா?



இலங்கையில் தேர்தல்கள் வரப்போகும் ஒரு சூழ்நிலையில் சீர்திருத்தக் கொள்கைகளை இலங்கை தொடர்ந்தும் முன்னெடுப்பதை உறுதிப்படுத்த வேண்டுமென சர்வதேச நாணய நிதியம் எச்சரிக்கை செய்துள்ளது.

அமெரிக்க தலைநகர் வொசிங்டனில் செய்தியாளர் மாநாட்டில் ஊடகவியலாளர் ஒருவரின் கேள்விக்கு பதிலளித்த சர்வதேச நாணய நிதியத்தின் ஆசிய – பசிபிக் இலாகாவின் உதவி பணிப்பாளர் Anne-Marie Gulde அம்மையார் இந்த எச்சரிக்கையை விடுத்திருக்கிறார்.

அத்துடன் தேர்தல் வரவுள்ள சூழலில் இலங்கை கட்டாயமாக புத்திசாலித்தனமான கொள்கையைப் பின்பற்ற வேண்டும் எனவும் வலியுறுத்தியிருக்கிறார்.

மேலும் அவர் அங்கு கருத்துத் தெரிவிக்கையில்,

நாங்கள் இலங்கைக்கு மூன்று விடயங்களை வலியுறுத்த விரும்புகிறோம். வருவாயுடன் கூடிய புத்திசாலித்தனமான நிதிக் கொள்கை, ஜாக்கிரதையான நிதிக் கொள்கை, தொடர்ந்து நிதிக் கையிருப்பை பேணுதல் என்பனவற்றையே நான் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

உங்களுக்குத் தெரியும் அங்கு பெரும் பொதுக்கடன் உள்ளது. அப்படியிருக்கையில் சந்தைக்கான நம்பிக்கையை ஏற்படுத்துவது கடினமானது. அமைப்பு ரீதியான மாற்றங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அவர்கள் வர்த்தகத்தைத் திறத்தல், சீர்திருத்தங்களை ஏற்படுத்துதல், போட்டித்தனமையை அதிகரித்தல் என்பவற்றில் கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

இலங்கையில் வேலையில்லா நிலை கீழ்மட்டத்தில் உள்ளது. ஆனால் இலங்கையைப் பொறுத்தவரையில், போட்டித்தன்மையை அதிகரிப்பது, வளர்ந்து வரும் முதியோர் நிலையில் கவனம் செலுத்துவது, தொழில் சீர்திருத்தங்களை மேற்கொள்வது என்பவை முக்கியமானவையாகும்.

இவ்வாறு அவர் தெரிவித்திருக்கிறார்.

உலகின் மிகப்பெரிய வட்டிக்கடைக்காரர்களில் ஒன்றான (மற்றது உலக வங்கி) சர்வதேச நாணய நிதியத்தின் முக்கியமான அதிகாரி ஒருவர் இலங்கையில் நடைபெறப்போகும் தேர்தல்களுடன் சம்பந்தப்படுத்தி இலங்கையின் பொருளாதார நிலை பற்றி தெரிவித்துள்ள இந்தக் கருத்துக்கள் மூலம் சில முக்கியமான விடயங்கள் தெளிவாகின்றன.

**டேவிட் ராஜ்**

அதாவது, இலங்கை தனது வருவாயைப் பெருக்க வேண்டும் என்பதையே அவர் வலியுறுத்துகிறார். ஆனால் எப்படி வருவாயைப் பெருக்க வேண்டும் என்பதில் அவர் தெளிவான விளக்கத்தைக் கொடுக்கவில்லை.

பொதுவாக ஒரு நாடு தன் வருவாயைப் பெருக்குவதானால், அது சிறந்ததொரு தேசிய பொருளாதாரக் கொள்கையை நடைமுறைப்படுத்த வேண்டும். அதன் மூலம் தேசிய உற்பத்தியைப் பெருக்கி, உள்நாட்டுச் சந்தையில் பொருட்களின் விலையைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதன் மூலம் மக்களின் வாங்கும் சக்தியை அதிகரிக்க வேண்டும்.

இதன் மூலம் இறக்குமதிக்கு செலவாகும் அந்நியச் செலவாணியை மீதப்படுத்த முடியும். இப்பொழுது தேசிய வருவாயில் 50 சதவிகிதம் இறக்குமதிக்கு செலவிடப்படுகின்றது.

அத்துடன் இன்னொரு வழியில் உள்நாட்டு உற்பத்தியை ஊக்குவிப்பதன் மூலமும், அதன் தரத்தை மேம்படுத்துவதின் மூலமும் ஏற்றுமதியை அதிகரித்து அந்நியச் செலவாணி வருவாயையும் அதிகரிக்க முடியும்.

இவற்றின் மூலமே அரச கருவூலத்தில் பணத்தைச் சேமிக்க முடியும்.

ஆனால் வொசிங்டனில் பேட்டியளித்த சர்வதேச நாணய நிதிய அதிகாரி, இவற்றைப் பற்றிக் குறிப்பிடாமல், வேறு வழிகளில் பணத்தை திரட்ட முயற்சிக்குமாறு பூடகமாகக் குறிப்பிடுகிறார்.

அதாவது, பொருளாதாரக் கட்டமைப்பு முறையில் சீர்திருத்தங்களை மேற்கொள்ளுமாறு குறிப்பிடுகிறார். நிச்சயமாக இதன் அர்த்தம், தற்போது இலங்கையில் அரச துறைகளாக இருக்கும் கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, எரிபொருள், துறைமுகம், போன்ற அத்தியாவசியத் துறைகளை தனியார்மயப்படுத்த

வேண்டும் என்பதாகும். அத்துடன் அவற்றைத் தனியார்மயப்படுத்தி போட்டியை ஊக்குவிக்க வேண்டும் என்பதுமாகும்.

இன்னொன்றை அவர் வெளிப்படையாகச் சொல்லவில்லை. ஆனால் அதைத்தான் உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் என்பனவற்றின் தாளத்துக்கு ஏற்ப செயற்படும் இன்றைய ஐ.தே.க. அரசாங்கம் செய்து வருகின்றது.

அதாவது, உற்பத்தியை ஊக்குவித்து, முதலீடுகளைக் கவர்ந்திழுத்து வருவாயைப் பெருக்குவதற்குப் பதிலாக, ஐ.தே.க. அரசு மக்கள் மீதான வரிகளை அதிகரித்து தனது நிதிப் பிரச்சினையைத் தீர்க்க முயல்கிறது.

இது வீட்டின் கூரையைப் பிடுங்கி சமைப்பதற்கு அடுப்பை எரிப்பதற்கு பயன்படுத்துவது போன்றது.

அண்மையில் நிதியமைச்சர் மங்கள சமரவீர சமர்ப்பித்த வரவு செலவுத் திட்டத்தில் இதை அவதானிக்கலாம். அதுமட்டுமின்றி, இரண்டு வரவு செலவுத்திட்டங்களுக்கு இடைப்பட்ட காலத்தில் பொருட்களின் விலைகளை திடீர் திடீரென பலமடங்கு அரசாங்கம் உயர்த்துவதிலிருந்தும் இதைக் கண்டு கொள்ளலாம்.

ஆனால் சர்வதேச நாணய நிதிய அதிகாரியின் பேட்டியிலிருந்து இன்னொரு விடயமும் புலனாகின்றது. அதாவது, இலங்கை அரசு நாணய நிதியத்தின் ஆலோசனைகளுக்கிணங்க பொருளாதாரத்துறையில் ஏற்கெனவே மாற்றங்களைச் செய்ய ஆரம்பித்துவிட்டது என்பதே அது. அதற்காகத்தான் நிதியமைச்சர் மங்கள சமரவீர அடிக்கடி வொசிங்டனுக்கு காவடி தூக்கிச் சென்றார் என்பதும் தெரியாத விடயமல்ல.

அதேநேரத்தில் இலங்கையில் ஒரு வருட கால அவகாசத்தில் நடைபெறவுள்ள மாகாண, ஜனாதிபதி, நாடாளுமன்றத் தேர்தல்களில் தற்போதைய ஏகாதிபத்திய சார்பு ஐ.தே.க. அரசுக்கு எதிரான தேசபக்த சக்திகளே வெற்றியீட்டப் போகின்றன என்ற எச்சரிக்கை உணர்வும் சர்வதேச நாணய நிதிய அதிகார அம்மையாரின் பேச்சில் வெளிப்பட்டு நிற்கின்றதை அவதானிக்க முடிகிறது.

# கடைசியில் கண்ணைத் திறந்தார் சம்பந்தன்!

**மா**காண சபைகளுக்கான தேர்தல்களை ஐ.தே.க. அரசாங்கம் இழுத்தடிப்பதில் தமிழ் சேியக் கூட்டமைப்புக்கும் பங்குண்டு என ‘வானவில்’ அடிக்கடி சுட்டிக்காட்டி வந்துள்ளது.

இந்த ஜனநாயக விரோதப் போக்கு குறித்து எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களான மகிந்தானந்த அளுத்கமகே மற்றும் டலஸ் அழகப்பெரும ஆகியோர் நாடாளுமன்றத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பினரை நோக்கி விரலை நீட்டியிருந்தனர்.

அவர்கள் நாடாளுமன்றத்தில் பேசிய பின்னர்தான் கூட்டமைப்புத் தலைவர் இரா.சம்பந்தன் தனது திருவாயைத் திறந்து, “மாகாண சபைகளுக்கான தேர்தல்களை விரைவில் நடத்த வேண்டும் என்ற எதிர்க்கட்சியினரின் கோரிக்கையுடன் நான் உடன்படுகிறேன்” எனப் பேசியிருக்கிறார்.

எதிர்க்ட்சித் தலைவராக இருந்த போது மக்களின் ஜனநாயக உரிமைகளை மதிக்கும்படி அரசியடம் வலியுறுத்தாத சம்பந்தன், தற்பொழுது உண்மையான எதிர்க்கட்சியினர் இடித்துரைத்த பின்னர்தான் திடீரென விழித்துக் கொண்டிருக்கிறார் போலும். (நாடாளுமன்றத்திலோ அல்லது பொதுவிடங்களிலோ யாராவது உரையாற்றும் போது சம்பந்தன் ‘ஐயா’ அவர்கள் வழமையாக கண்களை மூடிக்கொண்டிருப்பதை வைத்து இச்செய்தியின் தலைப்பு இடப்படவில்லை)

இதுவும் உண்மையோ போலியோ யார் கண்டது?

# ஜனாதிபதி பேசியென்ன திருந்தவா போகிறார்கள்?

**இ**லங்கையில் அரச சேவையில் இருக்கும் உத்தியோகத்தர்கள் அரசாங்கத்திடமிருந்து சம்பள அதிகரிப்பையும், வரப்பிரசாதங்களையும் எதிர்பார்க்கிறார்களேயொழிய, நாட்டை அபிவிருத்தி செய்வதில் அக்கறையுடன் செயற்படுகிறார்கள் இல்லை என குற்றஞ்சாட்டியிருக்கிறார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

இலங்கை நிர்வாக சேவை அதிகாரிகள் சங்கத்தின் 36 ஆவது வருடாந்த மாநாட்டில் உரையாற்றும் போதே ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டிருக்கிறார்.

ஜனாதிபதி கூறும் இவ்விடயம் இன்று நேற்று ஏற்பட்டதல்ல. இலங்கை சுதந்திரம் பெற்ற நாள் முதல் ஆரம்பமாகித் தொடர்கிறது. பிரித்தானிய காலனித்துவவாதிகளால் பயிற்றப்பட்ட இந்த அதிகார வர்க்கம், நாட்டு நலனிலோ மக்கள் நலனிலோ அக்கறை கொண்டு செயற்பட்டது கிடையாது. வெள்ளைத் துரைமார் இருந்த அதே கதிரைகளில் இந்தக் கறுப்புத் துரைமார் இருந்து கொண்டு, அதே காலனித்துவ சிந்தனையிலேயே தொடர்ந்தும் செயற்படுகின்றார்கள்.

மக்களின் வரிப்பணத்தில் அரசாங்கத்திடமிருந்து கொழுத்த சம்பளங்களையும் இதர சலுகைகளையும் பெறும் இந்த அதிகார வர்க்கம், போதாதிற்கு நாட்டின் அபிவிருத்திக்காக ஒதுக்கப்படும் பணத்திலும் கூசாமல் கை வைத்து லஞ்ச லாவண்யங்களிலும் புரள்கிறார்கள்.

நாட்டின் நிர்வாக அதிகாரக் கட்டமைப்பில் புரட்சிகர மாற்றங்களைச் செய்யாதவரை இந்த நிலையை மாற்றுவதென்பது பகல் கனவுதான். அதேநேரத்தில் தற்போதைய முதலாளித்துவப் பாராளுமன்ற முறையில் இந்த நிலையை மாற்றுவதென்பதும் நினைத்துப் பார்க்க முடியாத காரியம்தான் என்பதே உண்மை.

## வாழ்க்கை

“மனிதன் ஒருமுறைதான் வாழ்கிறான். அவன் இறக்கும்போது, தன் வாழ்வு விழலுக்கு இறைத்த நீராகிவிட்டதே என்று கவலைப்படாதிருக்க அவன் வாழ வேண்டும். தன் வாழ்நாள் பூராவும், தனது சக்தி முழுவதும் ஒரு மகோன்னத இலட்சியத்திற்காக – மனித குலத்தின் விடுதலைக்காகச் செலவிட்டேன் என்ற திருப்தியுடன் அவன் இறக்கட்டும்”

**-‘வீரம் விளைந்தது’ என்ற புகழ்பெற்ற சோவியத் நாவலை எழுதிய ஒஸ்ரோவொஸ்கி கூறியது.**

# கிளிநொச்சி மக்கள் மத்தியதர மக்களாகிவிட்டனராம்!

## 'சிந்தனைகூடத்தின்' கண்டு பிடிப்பு!!



'**சி**ந்தனைக்கூட – ஆய்வு, அபிவிருத்தி – யாழ்ப்பாணம் எனும் நிறுவனத்தின் குழுநிலை ஆய்வுக்குழுவினரது பதிலுரைகள், தொகுப்பு: பேராசிரியர் சிவச்சந்திரன்' என்ற அடைமொழியுடன் கூடிய கட்டுரை ஒன்று, *"இரணைமடு யாழ்ப்பாண நீர் விநியோகத் திட்டம் விவசாய சமூகத்தின் மீது ஏற்படுத்தியுள்ள தாக்கம்"* என்ற தலைப்புடன் 2014 யூலை 23 ஆம் திகதி 'காலைக்கதிர்' பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கட்டுரை வெளிவந்து சுமார் 5 வருடங்கள் ஆகிவிட்டது. அதன் பின்னர் இரணைமடு தண்ணீரை யாழ்ப்பாண மக்களுக்கு குடிநீராகக் கொண்டு செல்வது என்பது கிளிநொச்சி பிரதேச மக்களின் அடிப்படை உரிமையையும் தேவையையும் புறக்கணிக்கும் செயல் என்பதும், அதேவேளையில் யாழ்ப்பாண மக்களின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கு மாற்று வழிகள் காணப்பட வேண்டும் என்பதும், பொதுவாக எல்லோராலும் உணரப்பட்டுள்ளது.

ஆனால் இந்த சிந்தனைக்கூடத்தின் ஐந்து வருடங்களுக்கு முந்தைய கட்டுரையில் தேவையற்ற விதண்டாவாதங்களும், முன்னுக்குப் பின் முரணான கருத்துக்களும் முன் வைக்கப்பட்டுள்ளதைக் காண முடிகிறது. சிவச்சந்திரனின் தொகுப்புரையை முழுவதுமாக ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமல்ல. அவரது தொகுப்புரையில் காணப்படும் சில முக்கியமான பகுதிகளைப் பற்றிப் பேசுவதே இக்கட்டுரையின் நோக்கம்.

முதலில் ஒன்றைச் சொல்ல வேண்டும். சிவச்சந்திரனின் தொகுப்புரையில் சில விவசாயிகளே இந்தப் பிரச்சினையில் குழப்பங்களை ஏற்படுத்தி வருகின்றனர் என்ற அர்த்தப்படக் கூறப்பட்டுள்ளது. இது முற்றிலும் தவறு. இரணைமடுக் குள நீரை நம்பி விவசாயத்தில் ஈடுபட்டுள்ள பல்லாயிரக்கணக்கான விவசாயிகளின் பிரச்சினை இது.

அதுமட்டுமல்லாமல், புலிகளின் கட்டுப்பாட்டில் கிளிநொச்சி இருந்த காலத்தில் அவர்கள் கிளிநொச்சி விவசாயிகள் சிறுபோக நெற்செய்கையில் ஈடுபடாமல் உப உணவுப் பயிர்ச் செய்கையில் ஈடுபடும்படி வலியுறுத்தினார்கள் என்றும், ஏனெனில் உப உணவுச் செய்கையில் அதிக இலாபம் கிடைக்கும் என்பதற்காகவே அவ்வாறு கூறினார்கள் என்றும், புலிகளுக்கு வக்காலத்தும் வாங்கப்பட்டுள்ளது. (உப உணவுப் பயிர் செய்கை என்பது மேட்டுநில பயிர் செய்கை என்பதும், 'சித்திரை சிறு வெள்ளத்தின்' போது இலேசாக வெள்ளம் நிரம்பிவிடும் வயல் நிலங்களில் செய்யக்கூடியது அல்லவென்பதும், புலிகளுக்கு மட்டுமல்ல, மெத்தப்படித்த மனிதர்களுக்கும் தெரியாமல் இருப்பது ஒன்றும் ஆச்சரியகரமானது அல்ல)

**கந்தசாமி**

உண்மை என்னவெனில், கிளிநொச்சிப் பகுதியில் இருந்த நூற்றுக்கணக்கான ஏக்கர் வயல்கள் வைத்திருந்த பெரும் காணிச் சொந்தக்காரர்கள் எல்லோரும் புலிகளுக்குப் பயந்து வெளிநாடுகளுக்கும் கொழும்புக்கும் ஓடிவிட, அவர்களின் காணிகளை புலிகள் ஆக்கிரமித்து வைத்துக்கொண்டு, சாதாரண விவசாயிகளுக்குச் செல்ல வேண்டிய நீரையும் தாமே அபகரித்துக் கொண்டதை சிவச்சந்திரன் போன்றவர்கள் அறிவார்களா?

2002 இல் போர் நிறுத்த காலத்தில் நூற்றுக்கணக்கான உள்நாட்டு – வெளிநாட்டு ஊடகவியலாளர்களை அழைத்து புலிகளின் தலைவர் பிரபாகரன் கிளிநொச்சியில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் செய்தியாளர் ஒருவர், "உங்களின் பொருளாதாரக் கொள்கை என்ன?" என்று கேட்க, பிரபாகரன் என்ன சொல்வதென்று தெரியாமல் திருதிருவென முழிக்க, அவருடைய 'அரசியல் ஆலோசகர்' அன்ரன் பாலசிங்கம் குறுக்கிட்டு, "எமது பொருளாதாரக் கொள்கை திறந்த பொருளாதாரக் கொள்கை" என பதில் சொல்லியதிலிருந்தே, புலிகள் எப்படி கிளிநொச்சி விவசாயிகளுக்கு உதவியிருப்பார்கள் என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

இந்தத் தொகுப்புரையில் ஓர் இடத்தில் இவ்வாறு கூறப்பட்டிருக்கிறது.

*"இரணைமடுத்திட்டத்தில் அரசாங்கம் குடியேற்றத்திட்டத்தினை ஆரம்பித்த போது பல்வேறு மனிதாபிமான உதவித்திட்டங்களை வழங்கியிருந்தது. அவையாவன: காடு வெட்டுவதற்கான நிதியுதவி, வீடுகட்டிக் கொடுத்தல், குடிநீர் வசதி, ஜீவனோபாயத்திற்கான உதவி, போக்குவரத்து மற்றும் மருத்துவ உதவி என்பனவாகும். இந்நிலையில் யானை,சிங்கம்,புலி போன்ற மிருகங்கள் அங்கு காணப்படவில்லை. அன்று குடியமர்த்தப்பட்ட குடும்பங்கள் தற்போது வசதியான மத்திய தரக் குடும்பங்களாக வளர்ச்சி அடைந்துள்ளன. இவர்கள் தற்போதும் தம்மை ஏழைகளாகக் காட்டிக் கொள்வதும் தமது எதிர்கால சந்ததியினர்க்கும் அரசிடமிருந்து தொடர்ந்து அதே சலுகைகளைப் பெற்றுக் கொள்ள நினைப்பதும் தவறான ஒன்றாகும்."*

காலம் காலமாக பெரும் வனப் பிரதேசமாக இருந்த ஒரு பகுதியில் மக்களைப் புதிதாகக் குடியமர்த்தும் போது அரசாங்கம் சில உதவிகளை வழங்குவது தவிர்க்க முடியாதது. அதுவும் இக்குடியேற்றத் திட்டங்களில் கூடுதலாகக் குடியேற்றப்பட்டவர்கள் யாழ்ப்பாணக் குடாநாட்டைச் சேர்ந்த ஏழை எளிய மற்றும் தாழ்த்தப்பட்ட மக்கள் எனும்போது, அவர்களிடம் தமது புதிய காட்டு நிலத்தைத் திருத்தி அங்கு

வாழ்க்கையை ஆரம்பிப்பதற்கு ஒரு செப்புச்சல்லி கூட இருந்திருக்காது என்பது இந்தப் பேராசிரியப் பெருந்தகைகளுக்கு ஏன் தெரியாமல் போனதோ?

இன்னொரு விடயம் சிவச்சந்திரனின் இந்தத் தொகுப்புரையில் இரணைமடு குளத்தின் கீழ் குடியேற்றத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்ட போது அங்கு யானை, சிங்கம், புலி போன்ற மிருகங்கள் காணப்படவில்லை எனக் கூறப்பட்டுள்ளது. இதைக் கேட்டு அழுவதா சிரிப்பதா எனத் தெரியவில்லை.

ஏனெனில், இந்தக் குடியேற்றத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டு பல வருடங்கள் கடந்த பின்னரும் யானை போன்ற மிருகங்களால் விவசாயிகளுக்கு பயிர் அழிவு ஏற்படுவது சர்வசகஜமாக இருந்து வந்திருக்கிறது. கிளிநொச்சி காட்டில் சிங்கம் வாழ்ந்ததிற்கான சான்று இல்லைதான். ஆனால் யானை, புலி, கரடி, நரி, ஓநாய், பன்றி, மான், மரை, முள்ளம்பன்றி, முயல் உட்பட பலவிதமான காட்டு மிருகங்களும், விசப் பாம்புகளும் இருந்ததற்கான சான்றுகள் அன்றும் உண்டு, இன்றும் உண்டு.

இவையெல்லாவற்றையும் விட, இந்தத் தொகுப்புரையில் உள்ள மோசமான ஒரு கருத்து என்னவெனில், கிளிநொச்சியில் குடியேறிய குடும்பங்கள் இப்பொழுது இப்பொழுது மத்தியதர வர்க்கமாக வளர்ச்சியடைந்து வசதியாக வாழ்கின்றனர் என்றும், எனவே அவர்களது இன்றைய சந்ததியினர் தம்மை ஏழைகளாகக் காட்டிக்கொண்டு தொடர்ந்தும் அரச உதவிகளை எதிர்பார்க்கக்கூடாது என்று நாக்கூசாமல் குறிப்பிட்டிருப்பதுதான்.

30 வருட கொடிய போரால் யாழ்ப்பாணத்து மத்தியதர வர்க்கமே ஒட்டாண்டியாகிவிட்ட நிலையில், கிளிநொச்சியில் குடியேறிய 'பரதேசி' மக்கள் மட்டும், அதுவும் போர் நடந்த பகுதியில் வாழ்ந்த மக்கள் மட்டும் மத்தியதர வர்க்க மக்களாக மாறிவிட்டனர் என்ற சிந்தனைக்கூடத்தின் கண்டுபிடிப்பை என்னவென்று சொல்வது? யாழ்ப்பாண மேட்டுக்குடி மையவாதத்தின் குணாம்சம் என்று சொல்வதா அல்லது உயர் வர்க்கத் திமிர் என்று சொல்வதா?

கிளிநொச்சி மக்கள் பற்றிய இந்த வர்க்கக் கண்டு பிடிப்பிலிருந்தே இவர்களது அந்தரங்க நோக்கம் என்னவென்பது அம்பலமாகி விடுகிறது.

# கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் மனைவி கௌரவாம்பாள் காலமானார்!

மக்கள் கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்களின் மனைவி கௌரவாம்பாள் 79 ஆவது வயதில் உடல்நலக்குறைவு காரணமாக காலமானார். தஞ்சாவூர் மாவட்டம் பட்டுக்கோட்டையிலிருந்து பத்துக் கிலோமீட்டர் தூரத்திலுள்ள செங்கப்படுத்தான்காடு (தமிழில், சங்கம் படைத்தான் காடு) கிராமத்தில் வசித்து வந்த மக்கள் கவிஞரின் மனைவி கௌரவாம்பாள் கடந்த சில மாதங்களாக உடல் நலக்குறைவு காரணமாக சிகிச்சை பெற்று வந்தார். இந்நிலையில் ஏப்ரல் 3 ஆம் திகதி அன்று இரவு காலமானார். அம்மையாருக்கு செய்தி மக்கள் தொடர்புத் துறையில் கூடுதல் இயக்குநராக பணியாற்றி ஓய்வு பெற்ற குமாரவேல் என்ற மகன் உள்ளார்.

பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் இந்திய கம்யூனிஸ்ட் இயக்கத்தின் ஒரு புகழ்பூத்த கவிஞராவார். அவரது பாடல்களில் இருந்த எளிமையும், அவரது கதா மாந்தர்களாக கிராமப்புற ஏழை மக்கள் இருந்தமையும், கிராமிய மணம் வீசியமையும் அவரது பாடல்களுக்கு மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பை ஏற்படுத்தியது. கல்யாணப்பரிசு, நாடோடி மன்னன் போன்ற படங்கள் அவரது பாடல்களாலேயே வெற்றி பெற்றன எனலாம். கண்ணதாசன் திரைப்பாடலாசிரியராக பிரபல்யம் அடைவதற்கு முன்னர் கல்யாணசுந்தரமே முடிசூடா மன்னனாக திரையுலகில் வலம் வந்தார்.

*1930 ஏப்ரல் 13 ஆம் திகதி பிறந்த*



*கல்யாணசுந்தரம் 1959 ஒக்ரோபர் 8 ஆம் திகதி தமது 29 ஆவது வயதில்* மறைந்தார். அந்த குறுகிய காலத்தில் அவர் புகழின் உச்சியைத் தொட்டிருந்தார்.

கல்யாணசுந்தரத்துக்கும் கௌரவாம்பாளுக்கும் 1957 ஆம் ஆண்டு புரட்சிப் பாவேந்தர் பாரதிதாசன் தலைமையில் திருமணம் நடந்தது. அவர்களது திருமண வாழ்வு சென்னையில் சுமார் ஒன்றரை வருடங்களே நீடித்தது. கவிஞரின் மறைவுக்குப் பின் கௌரவம்மாள் ஆறு மாதக் குழந்தையான மகன் குமாரவேலுவுடன் செங்கப்படுத்தான்காடு வந்துவிட்டார். தமது திருமண வாழ்வு இன்னும் சில வருடங்களாவது நீடித்திருக்கக் கூடாதா என்ற ஆயாசம் தனக்கு ஏற்படுவதுண்டு என கௌரவாம்பாள் பேட்டியொன்றில் குறிப்பிட்டிருக்கிறார்.

'கல்யாணமான புதுசிலே பட்டுக்கோட்டையார் ரொம்ப பிசி. பாட்டெழுத காலையில் கிளம்பிப் போனால் இரவு ரொம்பத் தாமதமாக வருவார். சில சந்தர்ப்பங்களில் நான் அசந்து தூங்கி விடுவேன். கவிஞர் கோபமாக ஏதாவது திட்டுவார்' அவர் அண்ணன், 'அது சின்னப் பொண்ணுடா திட்டாதே... அது எத்தனை நேரம் உனக்காக கண் விழிச்சிருக்கும்' என்பார். அதுக்கு 'சின்னப் பொண்ணாம் சின்னப் பொண்ணு... சின்னப் பொண்ணை ஏன் எனக்கு கட்டி வச்சீங்க...' என்று கவிஞர் கோபத்துடன் அண்ணனிடம் சொன்னார். அன்றிலிருந்து என்னை கவிஞர் 'சின்னப் பொண்ணு'ன்னுதான் அழைப்பார்' என கௌரவாம்பாள் பேட்டியொன்றில் கூறியிருக்கிறார்.

கல்யாணசுந்தரத்துக்கு தலையில் ஏற்பட்ட 'மைக்ரேன்' தலைவலி காரணமாக மூக்கில் 1959 ஆம் ஆண்டு சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. அது பலனளிக்காமல் சில நாட்களில் அவர் காலமானார்.

புகழ்பூத்த ஒரு மக்கள் கவிஞரின் வாழ்க்கைத் துணைவியாக சில மாதங்களே வாழ்ந்தாலும் தமது இறுதி மூச்சுவரை முற்போக்கு சக்திகளுடன் உறவைப் பேணிவந்த கௌரவாம்பாள் அவர்களின் மறைவையொட்டி 'வானவில்' தனது அஞ்சலியையும், ஆழ்ந்த இரங்கலையும் தெரிவிக்கிறது.

**–ஆசிரியர் குழு**

**முன்பக்கத் தொடர்ச்சி...**

கண்டுள்ளனர்.

உலகில் இஸ்லாமியர்களுக்கு எதிரான செயற்பாடுகள் அதிகரித்த காரணத்தால் விரக்தியும் கோபமும் அடைந்த இஸ்லாமிய தீவிரவாதிகளால் ஐ.எஸ். அமைப்பு உருவாக்கப்பட்டது என்ற ஒரு கருத்து இருக்கிறது. அதேநேரத்தில் அமெரிக்காவும் இஸ்ரேலும் சவூதி அரேபியாவும் இணைந்து தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக ஐ.எஸ். அமைப்பை உருவாக்கியிருக்கக்கூடும் என்ற இன்னொரு கருத்தும் இருக்கிறது.

எது எப்படியிருந்த போதிலும் ஐ.எஸ். அமைப்பு என்பது நாசகரமான ஒரு பயங்கரவாத அமைப்பு என்பதில் இரண்டு கருத்துக்கு இடம் இல்லை. ஏனெனில் அவர்களின் குறி எப்பொழுதும் அப்பாவிப் பொதுமக்களாகத்தான் இருந்து வந்திருக்கிறது. கடந்த வருடமும் இந்த அமைப்பு இந்தோனேசியாவிலும், பிலிப்பைன்சிலும் தேவாலயங்களில் குண்டுத் தாக்குதல்களை நடத்தி பலரைக் கொலை செய்தது. மறுபக்கத்தில் இஸ்லாமிய பயங்கரவாதத்தின் உடன் பிறப்பாக ‘வெள்ளை பயங்கரவாதமும்’ பிறப்பெடுத்திருப்பதை அண்மையில் நியூசிலாந்தில் இரு முஸ்லீம் பள்ளிவாசல்களில் நடத்தப்பட்ட தாக்குதல்களும், அமெரிக்காவில் அடிக்கடி நடக்கும் குண்டுத் தாக்குதல்களும், ஐரோப்பாவின் சில நாடுகளில் நடந்த தாக்குதல்களும் நிரூபித்து நிற்கின்றன.

இந்த தாக்குதல் சம்பவங்கள் நடைபெற்றவுடன் இதை யார் செய்திருப்பார்கள் என்பது பற்றி அரசியல் வட்டாரங்களிலும், பொதுமக்கள் மத்தியிலும் பலவிதமான கருத்துக்கள் வலம் வரத்தொடங்கின. சிலர் அமெரிக்காதான் இதன் பின்னணியில் உள்ளது என ஊகம் வெளியிட்டனர். வேறு சிலர் இந்தியாதான் பின்னணியில் இருந்திருக்கலாம் என கருத்து வெளியிட்டனர். இன்னும் சிலர் பாகிஸ்தானை சந்தேகித்தனர். இந்த ஊகங்களில் ஒரு வேடிக்கை என்னவெனில், நாய்க்கு எங்கு அடித்தாலும் அது காலைத்தான் தூக்கும் என்ற கணக்காக, எதற்கெடுத்தாலும் ராஜபக்சாக்கள் மீது பழிபோடும் தமிழ் தேசியத்தில் ஊறித்திளைத்த ‘கல்தோன்றி மண் தோன்றாத காலத்தில் தோன்றிய’ நமது மூத்த தமிழ் குடியின் சில வீரர்கள் இந்த தாக்குதல்களையும் ராஜபக்சாக்கள்தான் (நல்லவேளையாக டக்ளசை இதில் சேர்க்கவில்லை) பின்னணியிலிருந்து செய்திருக்கின்றனர் என டமாரம் அடித்தனர்.

அதற்கு அவர்கள் சொன்ன காரணம் என்னவெனில், தாக்கப்பட்ட மூன்று தேவாலயங்களான கொச்சிக்கடை அந்தோனியார் ஆலயம், நீர்கொழும்பு சென் செபஸ்தியன் தேவாலயம், மட்டக்களப்பு சியோன் ஆலயம் என்பன தமிழ் கிறிஸ்தவர்கள் அதிகம் செல்லும் ஆலயங்கள் என்பதாகும். எதற்டுெத்தாலும் ஒரு இனவாதக் கண்ணோட்டத்துடன் அணுகுவதை பாரம்பரிய நடைமுறையாக வரித்துக் கொண்ட வியாதி இது.

ஆனால் வெறுமனே இஸ்லாமிய தீவிரவாதிகள்தான் இந்தத் தாக்குதலைச் செய்திருந்தாலும், இதற்கு ஒரு சர்வதேசப் பின்னணி இருந்திருக்கிறது என்ற உண்மையை யாரும் மறுக்க முடியாது. அந்த சர்வதேச சக்தி ஐ.எஸ்.தான் என்றாலும் கூட, அந்த அமைப்புக்கும் பின்புலமாக சில வல்லமை வாய்ந்த உலக சக்திகள் செயற்படுகிறார்கள் என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது. ஏனெனில் ஐ.எஸ்சை பின்னணியில் இருந்து இயக்குபவர்கள் யார் என்ற விடயம் அவர்கள் சிரியாவில் ஆசாத்தின் அரசாங்கத்துக்கு எதிராகப் போரிட்ட போது அம்பலத்துக்கு வந்தது.

இந்த தாக்குதலின் பின்னணியில் இஸ்லாமிய பயங்கரவாதிகளின் பழிதீர்க்கும் எண்ணம் மட்டும் இருந்ததாக நாம் கருதிவிட முடியாது. இதன் உண்மையான நோக்கம் இலங்கையில் இன – மத முரண்பாடுகளைத் தோற்றுவிப்பதன் மூலமும், இலங்கைக்கு வருவாய் ஈட்டித்தரும் உல்லாசப் பிரயாணத்துறையை சீர்குலைப்பதன் மூலமும் இலங்கையை நிலைகுலைய வைப்பதாகும்.

இத்தகைய செயற்பாடுகள் இன்றுமட்டும் புதிதாக ஏற்பட்டவை அல்ல. இலங்கையில் எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்க தலைமையில் 1956 இல் ஏகாதிபத்திய எதிர்ப்பு அரசாங்கம் ஒன்று என்று ஏற்பட்டதோ அன்றே ஆரம்பித்துவிட்டது. தொடர்ச்சியாக நடந்த சம்பவங்களைப் பார்த்தால் அது தெரிய வரும்.

தீவிர ஏகாதிபத்திய எதிர்ப்பு நடவடிக்கைகள் எடுத்ததிற்காக 1959 இல் பண்டாரநாயக்க கொலை செய்யப்பட்டார்.

பண்டாரநாயக்க கொலை செய்யப்பட்ட பின்னர் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற அவரது துணைவியார் சிறீமாவோ பண்டாரநாயக்கவின் அரசை இராணுவச்சதி மூலம் கைப்பற்றுவதற்கு 1962 இல் முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

இலங்கைப் பத்திரிகைத்துறையில் ஏகபோகம் வகித்த லேக்ஹவுஸ் நிறுவனத்தை (இன்றைய பிரதமர் ரணிலின் குடும்ப சொத்து) தேசியமயமாக்க முயன்றபோது 1964 இல் சிறீமாவோவின் அரசு நாடாளுமன்ற சதி மூலம் கவிழ்க்கப்பட்டது.

1970 இல் மக்களின் அமோக ஆதரவு பெற்று மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் ஆட்சி அமைத்த இடதுசாரிகளையும் உள்ளடக்கிய சிறீமாவோ தலைமையிலான அரசை ஆயுதக் கிளர்ச்சியின் மூலம் தூக்கி எறிவதற்கு ஜே.வி.பி. இயக்கத்தின் போர்வையில் முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

அந்த முயற்சி தோல்வியடைந்த பின்னர், தமிழ் பிற்போக்கு தலைமைகளின் மூலம் தனிநாட்டுக்கான ஆயுதப் போராட்டம் முடுக்கிவிடப்பட்டு நாடு 30 வருடப் பேரழிவைச் சந்தித்தது.

மிகக்கடுமையான பிரயத்தனங்களின் மூலம் போரை முடிவுக்குக் கொண்டுவந்த பின்னர், போரை முடிவுக்குக் கொண்டு வந்த ராஜபக்ச அரசை கவிழ்ப்பதற்கு ஐ.நா. மனித உரிமைப் பேரவையைப் பயன்படுத்தி பலமான முயற்சி எடுக்கப்பட்டது.

இந்த முயற்சிகளுக்கெதிராக ராஜபக்ச அரசு உறுதியாக நிற்பதைக் கண்ட வல்லாதிக்க சக்திகள் அவரது அரசில் பிளவை ஏற்படுத்தி 2015 இல் நடைபெற்ற ஜனதிபதித் தேர்தலைப் பயன்படுத்தி ராஜபக்ச அரசை வீழ்த்தினர்.

ஆனால், சதிகாரர்களின் சூழ்ச்சியை மக்கள் ஏற்கவில்லை என்பதை அதன்பின் நடைபெற்ற அனைத்துத் தேர்தல்களும் எடுத்துக்காட்டின. அதுமட்டுமல்ல, ராஜபக்சவிடமிருந்து பிரித்தெடுத்து ஜனாதிபதியாக்கிய மைத்திரிபால சிறிசேனவே நாட்டு மக்களின் மனநிலையை உணர்ந்து திரும்பவும் ஏகாதிபத்திய அடிவருடியான ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிரான தனது அணிக்கு வந்துவிட்டார்.

இந்தச் சூழ்நிலையில் அடுத்து வர இருக்கின்ற மூன்று தேர்தல்களிலும் – மாகாணசபைத் தேர்தல், ஜனாதிபதி தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல் என்பவற்றில் தற்போதைய ஐ.தே.க. அரசாங்கத்தை மக்கள் தோற்கடித்து, மகிந்த ராஜபக்ச தலைமையிலான தேசபக்த சக்திகளின் அரசாங்கமொன்றை உருவாக்குவார்கள் என்ற நிலை தெளிவாகத் தோன்றியுள்ளது.

இந்தச் சூழ்நிலையில் நாட்டில் பயங்கரவாதச் செயற்பாடுகளைக்

கட்டவிழ்த்துவிட்டு, அழிவுகளையும் குழப்பங்களையும் ஏற்படுத்தி, மக்களை அச்சத்தில் ஆழ்த்தி, நாட்டில் இராணுவ ஆட்சியொன்றுக்கு அடித்தளம் இடுவதே தற்போது இலங்கையில் நடத்தப்பட்டுள்ள குண்டுத் தாக்குதல்களின் பின்னணியும் நோக்கமுமாகும் என்பதில் எள்ளளவும் சந்தேமில்லை. சில சர்வதேச சக்திகள் இன்றைய சூழலைப் பயன்படுத்திக் கொண்டு இலங்கைக்கு உதவுவதாக நாட்டுக்குள் நுழைய முற்படுவதையும், இலங்கை எதிர்நோக்கும் பிரச்சினைகளை இலங்கையர்களான எம்மாலேயே தீர்த்துக்கொள்ள முடியும் என எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச கூறியிருப்பதையும் பார்க்கையில் சில வெளிநாட்டுச் சக்திகளின் நோக்கம் தெளிவாகின்றது.

இன்னொரு முக்கியமான விடயமென்னவெனில், நாட்டுக்கு விரோதமான சக்திகள் இத்தகைய நாசகாரச் செயல்களை அரங்கேற்றுவதற்கு வசதியாக ஐ.தே.க. அரசு பதவிக்கு வந்த நாளிலிருந்து பாதுகாப்பு ஏற்பாடுகளைத் தளர்த்திவிட்டுள்ளது.
அதுமாத்திரமில்லாமல், போதைவஸ்து வியாபாரத்தில் மட்டுமின்றி, இத்தகைய பயங்கரவாதச் செயல்களிலும் அதிகாரத்தில் இருக்கும் அரசியல்வாதிகளுக்கும், ஆயுதப்படைகளில் உள்ள சில அதிகாரிகளுக்கும் தொடர்பு இருக்கின்றது என்பதும் தெளிவான விடயம்.

சமீபத்தைய தாக்குதல் சம்பவம் பற்றி இந்திய புலனாய்வுத்துறை இலங்கை பாதுகாப்புத்துறையினருக்கு ஏப்ரல் 4 ஆம் திகதி அறிவித்திருந்தும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அசமந்தமாக இருந்திருக்கின்றனர். இது சம்பந்தமாக பொலிஸ் மா அதிபருக்கு கிடைத்த தகவலை அவர் தம்முடன் பகிரவில்லை என இராணுவத்தளபதி பகிரங்கமாகக் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இந்தியா என்ன உள்நோக்கம் கொண்டிருந்தாலும் எமது பெரிய அயல்நாடு. அப்படியான ஒருநாடு மிக முக்கியமான புலனாய்வுத் தகவலை வழங்கும் போது அதைப் பாரதூரமாக எடுத்திருக்க வேண்டும். அதுவும் இந்தியப் புலனாய்வுப் பிரிவால் கைது செய்யப்பட்ட ஐ.எஸ். பயங்கரவாதி ஒருவன் விசாரணைகளின் போது, இலங்கை குண்டு வெடிப்புச் சூத்திரதாரிகளில் ஒருவனான காத்தான்குடியைச் சேர்ந்த சஹ்ரான் என்பவனுக்கு தான் பயங்கரவாதப் பயிற்சி அளித்ததாகத் தெரிவித்த தகவலை இந்தியா இலங்கையுடன் பகிர்ந்த போதும் இலங்கை அதிகாரிகள் அசிரத்தையாக இருந்திருக்கிறார்கள்.

இதிலிருந்து இலங்கை பாதுகாப்புத்துறையில் பெரும் ஓட்டை இருப்பது தெரிகிறது. சமீபத்தைய குண்டு வெடிப்பின் பின்னர் நாட்டின் பல பாகங்களில் தொடர்ந்து வெடிப்பொருட்கள் மீட்கப்படுவதாகச் செய்திகள் வருகின்றன.

அப்படியானால் இதற்கு முன்னர் ஏன் அவைகள் பாதுகாப்புத்துறையினரால் கண்டறியப்படவில்லை.
பாதுகாப்புத்துறையில் ஓட்டை இருந்ததால் தானே அவை கண்டறியப்படவில்லை?

எனவே, இப்பொழுது செய்ய வேண்டிய விடயம், முதலாவது, இந்தத் தாக்குதல்களின் அரசியல் நோக்கம் தீவிரமாகப் பரிசீலிக்கப்பட வேண்டும். இரண்டாவது விடயம், இலங்கையின் பாதுகாப்புத்துறையில் உள்ள குறைபாடுகள் களையப்பட வேண்டும். மூன்றாவது விடயம், தற்போதைய சம்பவங்களை வைத்து மக்கள் மீது கெடுபிடிகளை அதிகரித்து அவர்களை அச்சத்தில் ஆழ்த்துவதற்குப் பதிலாக அவர்களது பூரண ஒத்துழைப்புடன் இன – மத நல்லிணக்கத்தை உருவாக்கி எதிர்காலத்தில் எந்தவொரு பயங்கரவாதச் செயலும் இடம் பெறாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

இந்த மாபெரும் கடமையை ஏகாதிபத்திய சக்திகளுடன் தொடர்பு வைத்துக்கொண்டு, போதை வஸ்துக் கும்பலுடனும், பயங்கரவாத அமைப்புகளுடனும் கூடிக்குலாவும் இன்றைய ஐ.தே.க. அரசால் ஒருபோதும் செய்ய முடியாது.

பரந்துபட்ட மக்கள் இயக்கம் ஒன்றை உருவாக்குவதின் மூலமாகவும், அந்த இயக்கத்தின் ஊடாக ஆட்சி மாற்றம் ஒன்றை ஏற்படுத்துவதின் மூலமாகவுமே இதைச் சாதிக்க முடியும்.

# வறுமையை ஒழிப்பதில் சோசலிசமே சிறந்த வழி என்பதை சீனா நிரூபிக்கின்றது!

சீனாவில் 2020 இல் வறுமையை முற்றுமுழுதாக ஒழித்துக்கட்டுவது என்ற இலக்கை அடைவதில் அதன் சோசலிச அமைப்புமுறை ஒரு தீர்க்கமான பங்கை வகிக்கிறது.

“சோசலிசம் என்பதன் அர்த்தம் வளர்ச்சியாகும். வளர்ச்சி ஒவ்வொருவருக்கும் கட்டாயமாக பொதுவான செழிப்பை வழங்க வேண்டும்” என சீன ஜனாதிபதி ஸி ஜின்பிங் அண்மையில் தென்மேற்கு சீனாவில் உள்ள சொங்கிங் மாநகரசபையின் வறுமைக்கு எதிரான போராட்ட முயற்சிகளை மேற்பார்வை செய்யச் சென்றபொழுது குறிப்பிட்டார்.

சீனாவின் சோசலிச அமைப்புமுறை அதன் செழிப்பான வளங்களைப் பயன்படுத்தி அதன் இலக்குகளை ஆரம்பத்திலிருந்து முடிவுவரை அடைவதில், குறிப்பாக மக்களின் வாழ்க்கை நிலைமைகளை மேம்படுத்துவதில் சாத்தியமாக்கியுள்ளது.

கடுமையான பிரயத்தனங்களின் மூலம் கடந்த நான்கு தசாப்தங்களில் 700 மில்லியன் (70 கோடி) சீன மக்கள் வறுமையிலிருந்து மீட்கப்பட்டு, கிராமப்புறங்களில் 1978 இல் 97.5 சதவீதமாக இருந்த வறுமை நிலை 2018 இல் 1.7 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. சீனக் கம்யூனிஸ்ட் கட்சி, 2020 இல் நாட்டின் எல்லாப் பிரிவுகளிலும், மாவட்டங்களிலும் வறுமையை முற்றாக ஒழித்து, வறுமைக்கெதிரான இறுதி இலக்கை அடைவதென 2017 இல் உறுதியளித்தது.

சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையின் கீழ் வறுமை ஒழிப்பு என்பது நாட்டின் மூலோபாயக் கடமையாகக் கொள்ளப்பட்டது. இந்தக் கடமையைத் திட்டமிட்டவாறு சரியான நேரத்தில் செய்து முடிப்பதில் எல்லா மட்டங்களிலும் உள்ள அரசாங்கங்கள் சகலவிதமான நடவடிக்கைகளையும் எடுத்து உறுதி செய்தன.

இந்த விடயத்தில் மத்திய அரசாங்கத்தின் கொள்கையை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்காக அரசாங்க உத்தியோகத்தர்கள், முன்னாள் படை வீரர்கள், கல்லூரி பட்டதாரிகள் உட்பட கட்சி உறுப்பினர்கள் நாடு முழுவதுமுள்ள பின்தங்கிய கிராமப்புறங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

சீனா தீர்க்கமான தருணங்களில் எப்பொழுதும் சரியான இடத்தில் சரியான நேரத்தில் உள்ளூர் நிலைமைகளுக்கு ஏற்ப அதன் வழங்களைப் பயன்படுத்தி அதன் இலக்கை அடைவதை வழமையாகக் கொண்டுள்ளது. வறுமையை ஒழிப்பதற்கான காலவரையறைக்கு இன்னும் இரண்டு வருடங்கள் மட்டுமே இருக்கையில் அதன் இறுதி இலக்கை அடைவதற்கான சிரமமான பணியை நிறைவேற்றுவதில் நாடு ஒரு தீர்க்கமான கட்டத்தில் நிற்கிறது. சோசலிச அமைப்பு தனது இறுதிப் போராட்டத்தின் போது தொடர்ந்தும் தனது பலத்தைக் காட்டும்.

**–சின்குவா (Xinhua) செய்திச் சேவை**

'Vaanavil' is a registered member of the National Ethnic Press and Media Council of Canada
வானவில்

# நேஸ்பி பிரபு (Lord Naseby) சொல்வது சரியானதா?

பிரித்தானிய பாராளுமன்றத்தின் பிரபுக்கள் சபை உறுப்பினரும், பிரித்தானிய சிறீலங்கா பாராளுமன்ற குழுவின் தலைவருமான நேஸ்பி பிரபு இலங்கை விவகாரங்களில் அதிக அக்கறையுள்ள ஒருவராவார். அவர் அடிக்கடி பிரித்தானிய பிரபுக்கள் சபையிலும், இலங்கை சம்பந்தமான கருத்தரங்குகளிலும், ஊடகங்களிலும் இலங்கை விவகாரங்கள் சம்பந்தமான கருத்துக்களை துணிகரமாகவும், கறாராகவும் முன்வைத்து வருகின்றார்.

ஆனால், நேஸ்பி பிரபுவின் கருத்துக்கள் பெரும்பாலான மேற்குலக அரசியல்வாதிகள் மற்றும் மனித உரிமை அமைப்புக்கள் முன்வைக்கும் கருத்துகளை விட எப்பொழுதும் வித்தியாசமானவையாக இருக்கின்றன.

இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் பிரித்தானியாவோ அல்லது இதர மேற்குலக நாடுகளோ தலையிடுவது தவறானது என்பது நேஸ்பி பிரபுவின் தொடர்ச்சியான கருத்தாகும். ஏனெனில், இலங்கை மீது குற்றஞ்சாட்டுபவர்களின் நாடுகளிலும் அதே விதமான நிலைமைகள் இருக்கின்றன என்பது அவரது வாதமாகும்.

இன்னொரு விடயம், இலங்கையில் நடைபெற்ற அரச படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான இறுதிப் போரின்போது மரணித்த பொதுமக்கள் பற்றிய எண்ணிக்கை சம்பந்தமானது.

இறுதிப் போரின் போது இலட்சக்கணக்கானவர்கள் அரச படைகளால் கொல்லப்பட்டதாக புலிகளும் அவர்களுக்குச் சார்பானவர்களும் தொடர்ச்சியாகப் பிரச்சாரம் செய்து வருகின்றனர். ஐ.நா. கூட இலங்கை இறுதிப் போரில் நாற்பதாயிரம் பேர் வரை கொல்லப்பட்டதாகக் கூறியுள்ளது. இந்தக் கணக்குகளை இலங்கை அரசாங்கமும் தொடர்ந்து மறுத்து வருகிறது.

இந்தச் சூழ்நிலையில் இலங்கை இறுதிப் போரின் போது கொல்லப்பட்ட பொதுமக்களின் எண்ணிக்கை ஏறத்தாழ 5,500 பேர்வரைதான் இருக்கும் என நேஸ்பி பிரபு



கூறிவருகின்றார்.

இலங்கையின் உள்நாட்டுப் போரின்போது மரணித்தவர்களின் உண்மையான தொகை எவ்வளவு என்பது குறித்து இலங்கை அரசாங்கமோ அல்லது ஏதேனும் ஒரு நடுநிலைமையான சர்வதேச நிறுவனமோ இதுவரை முறைப்படியான ஆய்வுகள் எதனையும் செய்திருக்கவில்லை. நேஸ்பி பிரபுவின் கருத்துக்கூட ஊகத்தின் அடிப்படையில் இருக்கக்கூடியதே.

**விடாக்கண்டன்**

இது சம்பந்தமாக இலங்கையில் வாழ்கின்ற சில மக்களுடன் தொடர்பு கொண்டு விசாரித்த போது முரணான தகவல்களே கிடைத்தன. ஆனாலும் தர்க்க ரீதியாகச் சிந்தித்துப் பார்ப்பதற்காக சில தகவல்களை முன்வைக்க வேண்டியுள்ளது. அதன்படி,

இறுதிப் போரின் போது நேரடியாகப் பாதிக்கப்பட்ட இரண்டு மாவட்டங்களான கிளிநொச்சி, முல்லைத்தீவு என்பனவற்றின் சனத்தொகை பற்றிய விபரம் வருமாறு:

கிளிநொச்சி மாவட்டத்தில் 4 பிரதேச செயலாளர் பிரிவுகளும், 95 கிராமசேவகர் பிரிவுகளும் இருக்கின்றன. இவற்றில் மொத்தமாக 112,875 மக்கள் வாழ்கின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 6 பிரதேச செயலாளர் பிரிவுகளும், 136 கிராமசேவகர் பிரிவுகளும் இருக்கின்றன. இவற்றில் மொத்தமாக 91,947 மக்கள் வாழ்கின்றனர்.

இத்தொகை பற்றிய விபரங்கள் 2012 இல் நடத்தப்பட்ட சனத்தொகைக் கணக்கெடுப்பிலிருந்து பெறப்பட்டவையாகும்.

இரு மாவட்டங்களினதும் மொத்தச் சனத்தொகை 204,822 ஆகும்.

ஐ.நா. வெளியிட்ட 40,000 பேர் என்ற புள்ளிவிபரத்தின்படி பார்த்தால், இரு மாவட்டங்களிலும் வாழ்ந்த மொத்த சனத்தொகையில் சுமார் 20 சத வீதமான மக்கள் இறுதிப் போரில் இறந்திருக்க வேண்டும். அதாவது, ஒவ்வொரு கிராமசேவகர் பிரிவிலும் சராசரியாக 18 பேர்வரை இறந்திருக்க வேண்டும்.

புலிகளின் ஆதரவாளர்கள் வெளியிடும் இறுதிப் போரில் அரச படைகளால் இரண்டு இலட்சம் பேர்வரை கொல்லப்பட்டதாகக் கூறப்படும் தகவலை வைத்துப் பார்த்தால் இரு மாவட்டங்களிலும் வாழ்ந்த முழு மக்களும் கொல்லப்பட்டிருக்க வேண்டும். ஆனால் இறுதிப் போரின் போது இராணுவத்திடம் சரணடைந்த 12,000 புலிப் போராளிகள் உட்பட 3 இலட்சம் மக்களுக்கு அரசாங்கம் புனர்வாழ்வு அளித்துள்ளது.

இந்தச் சூழ்நிலையில் புலிகளின் ஆதரவாளர்கள் சொல்லும் கணக்கு சரியா, ஐ.நா. சொல்லும் கணக்கு சரியா, அல்லது நேஸ்பி பிரபு சொல்லும் கணக்கு சரியா, என்ற விபரம் தெரியாது சாதாரண பொதுமகன் குழம்பி நிற்கிறான்.

இந்த விடயத்தில், எலிசபெத் மகாராணிக்கே கணக்கு படிப்பித்தவன் தமிழன்தான் (அந்தத் தமிழன் முன்னாள் வவுனியா நாடாளுமன்ற உறுப்பினர் காலஞ்சென்ற சி.சுந்தரலிங்கம்) என்று பெருமை பேசும் நமது தமிழினம், இறுதிப் போரில் கொல்லப்பட்டவர்களின் உண்மையான தொகையை அறிந்து வெளியிட்டால் சர்வதேசமும் அவர்களுக்குக் கடமைப்படும்.